பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00


www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 29 செவ்வாய்க்கிழமை (12.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 78

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# அரசும் புலிகளும் மீண்டும் பேசுமாறு நோர்வேப் பிரதமர் வலியுறுத்து

## புதுடில்லியில் வைத்துக் கருத்து



புதுடில்லி, பெப்ரவரி 12

இலங்கையின் இன நெருக்கடிக்கு இராணுவத் தீர்வு சாத்தியமேயில்லை என வலியுறுத்தியிருக்கும் நோர்வேப் பிரதமர் ஜென்ஸ் ஸ்டொல்டென்பேர்க், இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கான தனது விஜயத்தின் போது நோர்வே பிரதமர் புதுடில்லியில் வைத்துச் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை நெருக்கடிக்கு இராணுவ வழி முறையூடாகத் தீர்வு சாத்தியமென நோர்வே கருதவில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சில வருட மோதல்களுக்குப் பின்னர் இருதரப்பும் மீண்டும் பேச்சு மேசையில் சந்திக்கவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தசாப்தகால இன மோதலிற்குத் தீர்வைக் காண்பது குறித்து நோர்வே தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் ஸ்டொல்டென்பேர்க் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும், சகல சமூகத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அர்த்தபூர்வமான பேச்சு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தான் வேண்டுகோள் விடுக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமீபத்தில் முன்வைத்துள்ள அதிகாரப் பகிர்வு யோசனைகளுக்கு ஆலோசனைகள் எதனையும் வழங்க விரும்புகின்றீர்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "தீர்வு இப்படித்தான் உருவாக்கப்பட வேண்டும் என்ற வழிகாட்டுதல்களை வழங்குவது நோர்வேயின் பணியல்ல" - என பிரதமர் ஸ்டொல்டென்பேர்க் பதிலளித்தார். (உ)

## மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையை வடக்கு - கிழக்கில் அரசு பறித்துள்ளது

### வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.12

'வடக்கு - கிழக்கு மாவட்டத்தில் 4,500 ஆசிரியர் வெற்றிடங்கள் இதுவரையில் அரசால் நிரப்பப்படவில்லை. இதனால் அப்பகுதி மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையை அரசு பறித்துள்ளது'

- இவ்வாறு வேலையற்ற பட்டதாரிகளின் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றிணைந்த சங்கத்தின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அதன் அமைப்பாளர் சுஜித் குருவிட்ட இக்குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு பிள்ளைகளின் கல்வி பெறும் உரிமையை அரசு பறித்துள்ளது. இது

(10ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் மாணவன் சுட்டுக்கொலை

கொழும்பு, பெப். 12

அக்கரைப்பற்று கோளாவில் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்று மாணவன் ஒருவன் பலியாகியுள்ளான்.

கோளாவில் 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிங்கராசா சுசிதரன் (வயது - 16) என்ற மாணவனே கொல்லப்பட்டவராவார்.

கோளாவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற விசேட அதிரடிப்படையினரை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார், வவுனியா வைத்தியசாலைகளின் ஊழியர்கள் அடையாளப் பணிப் புறக்கணிப்பு

### மதவாச்சி சோதனைச் சாவடிக் கெடுபிடிகளை ஆட்சேபித்து

கொழும்பு, பெப். 12

வவுனியா மற்றும் மன்னார் பொது வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் நேற்றுக்காலையில் சுமார் இரண்டு மணிநேரம் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மதவாச்சி சோதனைச் சாவடியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களை அடுத்து அங்கு படையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளினால் வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் எதிர்நோக்கும் தடங்கல்களுக்கு எதிர்ப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டுக்கு இம்முறை ஜே.வி.பிக்கு அழைப்பில்லை

கோயம்புத்தூர், பெப்.12

இந்திய மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 19 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இடதுசாரிக் கட்சியான ஜே.வி.பிக்கு இம்முறை அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1970ஆம் ஆண்டு முதல் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் ஆளும் திராவிட முன்னேற்ற கழகத்தின் வேண்டுகோளை அடுத்தே கம்யூனிஸ்ட் மாநாட்டிற்காக ஜே.வி.பியிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புப் பாடசாலைகள் நேற்று வழமைக்கு மீண்டன

கொழும்பு, பெப். 12

பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த வாரம் மூடப்பட்டிருந்த கொழும்பு மாநகர சபைப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் நேற்று முதல் மீண்டும் வழமை போல இயங்கத் தொடங்கின.

கடந்தவாரம் செவ்வாய்க்கிழமை 5 ஆம் திகதிமுதல் 10 ஆம் திகதிவரை அரச மற்றும் தனியார் பாடசாலைகளைப் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தற்காலிகமாக மூடிவிடுமாறு திங்கட்கிழமை 4 ஆம் திகதி இலங்கையின் 60 ஆவது சுதந்திரதினத்தன்று கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவைத் தொடர்ந்து கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட அரச மற்றும் தனியார் பாடசாலைகள் அனைத்தும் 10ஆம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்டத்தில் தபால் சேவை ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, பெப்.12

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கான தபால் சேவைகள் தடைப்பட்டிருக்கின்றன என்று கிளிநொச்சி மாவட்ட தபாலகம் தெரிவித்திருக்கிறது.

கிளிநொச்சி மாவட்ட தபாலகத்திற்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இதுவரை வவுனியா தபாலகத்தில் இருந்து தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தபாலகத்திலிருந்தும் வவுனியா ஊடான யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளுக்கான தபால் சேவையும் இடம்பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான காரணங்கள் எவையும் வவுனியா தபாலகத்தினால் தமக்குத் தெரிவிக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிளைமோர் பொலிஸார் இருவர் பலி

வவுனியா, பெப். 12

வவுனியாவில் இருந்து பொலிஸாரின் வருடாந்த இருப்பை எடுப்பதற்காக மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலிஸார் கிளைமோரில் சிக்கினர். அதில் சப். இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

மன்னாரில் பணிபுரியும் பொலிஸாரின் வசம் உள்ள ஆயுதங்கள் மற்றும் உடமைகள் குறித்த இருப்பை கணக்கிடுவதற்காக

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை தோற்கடிப்பதற்கு இந்தியா இலங்கை அரசுக்கு உதவவேண்டும்

### ஆனந்தசங்கரி லண்டனில் தெரிவிப்பு

லண்டன், பெப். 12

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா உதவ வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

நெடுங்காலமாக நீடித்துவரும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு எந்த ஒரு தீர்வுக்கும் விடுதலைப் புலிகள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகையால் அவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லண்டனுக்கு விஜயம் செய்துள்ள 74 வய

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடமராட்சி பிரதேச மலர் வெளியீடு

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பிரதேச மலரான 'திருவுடையாள்' வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மு.ப 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசஅதிபர் கே.கணேஸ் கலந்து கொள்வார்.

மலர் ஆசிரியர் கி.நடராசாவின் அறிமுகவுரை, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசாவின் வெளியீட்டுரை, கலாநிதி க.குணராசா, கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் ஆகியோரின் மதிப்பீட்டுரை, கலாநிதி த.கலாமணியின் ஏற்புரையும் இடம்பெறவிருக்கின்றன.

முதல் பிரதியை யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி பெறுவார். (1)


# VACANCIES

**JOIN THE LEADING TEAM**

யாழ்ப்பாணம் நெல்லியடி



**TRAINEE INSTRUCTORS** Male / Female
- Should hold a recognized computer diploma
- Good communication skill in English

**COMPUTER INSTRUCTORS** Male / Female
- Should have working experience in the same field
- Subject areas are Application packages, Accounting packages, Graphic designing packages and Programming languages.

**LECTURER-Full time** Male / Female
- Should posses working experience in the same field
- Subject areas are VB, Oracle, Java, Scripts, Tally, C & C++

**Part time LECTURER** Male
- Should posses 01 year working experience in the same field
- Hardware & Networking

மேல் குறிப்பிட்ட பிரதேசங்களில் பணிபுரிய விரும்புவோர் தங்களுடைய சுயவிபரக்கோவையில் பணிபுரிய விரும்பும் இடத்தை குறிப்பிட்டு 7 நாட்களுக்குள் கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும் அல்லது விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும்.

**CSC COMPUTER EDUCATION**
No:101,2nd Floor, Stanley Road, Jaffna


## 29 ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**இராமநாதன் ஆனந்தலெட்சுமி**



தோற்றம் 26 ★ 11 ★ 1927

மறைவு 12 ★ 02 ★ 1979

ஆண்டுகள் இருபத்தொன்பது ஆனாலும்
ஆறாது எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்

தேவாலய வீதி,
சங்கானை. (71046) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி
**அம்பிகை கார்த்திகேசு**
[ஓய்வுபெற்ற ஆசிரியை, இளவாலை]

காடிவளை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், கல்கிசையை வதிவிட மாகவும் கொண்ட அமரர் அம்பிகை கார்த்திகேசு அவர்கள் (முன்னாள் ஆசிரியை, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்) 10.02.2008 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு (முன்னாள் அதிபர், புன்னாலை கட்டுவன் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் சிவயோகம், சிவஞானசக்தி, திருஞான சம்பந்தமூர்த்தி ஆகியோரின் அன்புத்தாயும் கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற வித்தியானந்தன், கனகமணி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற விசாலாட்சிப்பிள்ளை, தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேராதரன் (கோணேஸ்வரி), சிவாணி (சிவகோசாரியார்), உவ்வாசன் (சுபாஜினி), துவாரகா (ஜெய்சங்கர்) ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் அச்சுதன், சுரேன், கபிலா, கிரிஜெனன், சுகேதன், யுவிதா, தர்ணீதா, ஈசாணி, நிசாணி, அபிநயா, அக்சயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை (11.02.2008) காலை 10 மணியில் இருந்து கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (12.02.2008) செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No: 19,2/1 Old Quarry Road,
Mount Laviniya.
T.P 0112 72967.

தகவல்:
திருமதி வித்தியானந்தன்
(மகள்)

## செயலமர்வு

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புக்களில் நாடகமும் அரங்கியலும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்த செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. (1-207)


## விற்பனைக்கு

HNB stock brokers (pvt) Ltd. இல் பாவனையில் உள்ள Bajaj Boxeret Moter Bike 14000 Km ஓடிய நிலையில் விற்பனைக்கு உள்ளது. மிக குறைய விலை கோரலுக்கு விரும்புவோர் மோட்டார் சைக்கிளை பார்வையிட்டு மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளவர் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய இடம் -

SANNATHY MURUGAN
Work Shop & Service Authorised Service Dealer For David Pieris Motors Company LTD
No: 241, Point Pedro Road, Jaffna 021 222 8076

## MATHAN ELECTRONICS

- சகலவிதமான TV களும் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
- Sony TV கள் 21" KV 2183, KV 2184, KV 2185, G21, போன்றன விற்பனைக்கு உண்டு (ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்படும்)

மதன் எலக்ரோனிக்ஸ், சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
தொ.பே. 0776699623, 0776571156

## நெல் உற்பத்தியாளர்களுக்கு ஒரு நற்செய்தி

நெல்லினத்தின் அடிப்படையில் நெல் கொள்வனவு செய்யப்படும் என்பதை உற்பத்தியாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொடர்பு:
கதிர்வேலவன் அரிசி ஆலை,
கைதடி கிழக்கு.

## அறிவித்தல்

உங்கள் அபிமானத்தைப் பெற்ற சரஸ்வதி விலாஸ் எனும் ஸ்தாபனம் தற்சமயம் கே. கே. எஸ். வீதி, NO. 367, கதிரேசன் கோயில் அருகாமையில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகத்தினர்.


## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்-பெப்.12

வரணி கரம்பை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மை போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 1மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி) கோ.வரதராசமூர்த்தி கலந்து கொள்வார். (1-207)

* * *

யாழ்ப்பாணம்-பெப்.12

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று செவ்வாய்க் கிழமை வித்தியாலய மைதானத்தில் அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (1-207)


DIP. IN HARDWARE TECHNOLOGY

பிரிவு 1: பாடசாலை விலகியோர்
பிரிவு 2: அரச, தனியார் ஊழியர்கள்

15.02.2008 க்கு முன் பதிவு செய்யவும்

STP Your Partner in IT Solution
149, Kasthuriar Road, Jaffna


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் முன்னாள் உப தலைவரும்
யாழ்.மாவட்ட முன்னாள்
விளையாட்டு அதிகாரியுமான
**ராஜநாயகம் ரோகான் ராஜசிங்கம்**
08.02.2008 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மாவட்ட
மெய்வல்லுநர் சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்



அரியாலையைச் சொந்த முகவரியாகவும்,
வவுனியா-மகாறம்பைக் குளத்தைத் தற்காலிக
முகவரியாகவும் கொண்ட எமது அன்புக்குரிய உறவினர்
**சுப்பிரமணியம் பாலசுந்தரம்**
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)
10.02.2008 அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்னாரது ஆன்மா சாந்தியடைவதாக!

12, வில்வம் தெரு,
புங்கன்குளம்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (71049)

துயருடன்
ஆ. செல்லத்துரை குடும்பம்.

## மரண அறிவித்தல்

திருமதி **கனகம்மா குணரத்தினம்**

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் செம்மணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கு.கனகம்மா (08.02.2008) வெள்ளிக்கிழமை காலை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலம் - நாகமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான, குணரத்தினம், மாசிலாமணியின் அன்பு மனைவியும், மாணிக்கவாசகர், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், இராசநாயகம், இராசராணி, பாலலோஜனி காலஞ்சென்ற வைகுந்தநாதன் (பிரபல பொப்பிசைப்பாடகர்-ரமேஸ்), உருத்திரமணி, பவளராணி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் அழகம்மா அம்பிகைபாகன், கோவிந்தராசா (பெயின்ரர் மாமா), டொறின் மேரி ஆகியோ ரின் அன்புமாமியும்இரட்ணகுமார், பாலகுமார், ஆனந்த ரூபினி (லண்டன்), இரவீந்திரகுமார், துளசிதா, காலஞ்சென்ற பரந்தாமன், ரிஷிகேசன், சுதர்சன், சுபேதா, வனேஸ்குமார், வினோத், மைதிலி, ஜோனத்தன், எவான்துறு ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருஷிகா, பானுப்பிரியா, கீர்த்தனா, தனுஷன், றொஷான், கிருஷாந், அக்ஷ்னா, மயூரியா, விதுஷன், ஆருஜன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2008) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 47, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (71045)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவகக் கல்வி வலயப் பகுதிகளில்

# உரிய வயதில் பாடசாலை செல்லாதிருக்கும் இளவயதினரின் விவரம் திரட்டப்படுகிறது

## சிறப்புக் கல்வி வழங்குவதற்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.12

பாடசாலை செல்ல வேண்டிய வயதில் பாடசாலைகளுக்கு செல்லாமலிருக்கும் இளவயதினரையும் இடை விலகிய மாண வரையும் இனங்கண்டு அவர்கள் குறித்த விவரங்களை திரட்டுவதற்கான நட வடிக்கையில் தீவக கல்வி வலயத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

ஐந்து வயது தொடக்கம் 14 வயது வரை யான சிறார்களுக்குக் கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும். இது சிறுவர்களது அடிப்படை உரிமையாகும். பாடசாலை செல்லாத இந்த வயதுப்பிரிவினரின் விவ ரங்களை ''யுனிசெவ்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த வலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவினர் திரட்டி வருகின்றனர். முறைசாராக் கல்விப் பிர திக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் இந்தப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வேலணை, ஊர்காவற் துறை, காரைநகர், நெடுந்தீவு பிரதேச செய லகப் பிரிவுகளில் உள்ள கிராம சேவை அலு வலர்களின் உதவியுடன் இந்தச் செயல் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

சேகரிக்கப்படும் விவரங்கள் வகைப் படுத்தப்பட்டு இழந்த கல்வியை ஈடுசெய் வதற்கான விஷேட வகுப்புக்களை நடத்து வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விஷேடமான பயிற்சி வழங்கப்பட்ட ஆசி ரியர்களும் நியமிக்கப்படுவர். திருப்தி யான அடைவு மட்டம் எட்டப்பட்டதும் மாணவர்கள் அந்தந்தப் பகுதிப் பாடசா லைகளில் பின்னர் இணைக்கப்படுவர் என்றும் தெரியவருகிறது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கல்வி கலாசார நிறுவகத்தினதும்(யுனெஸ்கோ) சர்வதேச மன்னிப்புச் சபையின் சிறுவர் உரிமை தொடர்பான பிரகடனத்தின்படி யும் சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப் பாது விடுவதும் வீட்டு வேலைக்கு அமர்த்து வதும் தண்டனைக்குரிய குற்றம் எனத் தெரிகின்றது. (ப-302)

## நயினாதீவு பிரதேச அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.12

நயினாதீவு பிரதேச அபிவிருத்தி தொடர் பாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தலை மையில் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் பிரதிப் பிரதம செயலாளர் பி.கே.பரமலிங்கம் கலந்து கொண்டு நயினாதீவு பிரதேச அபி விருத்தி மற்றும் பிரச்சினைகள் குறித்து விளக்கினார்.

நயினாதீவு இறங்குதுறை 20 வரு டங்களுக்கு மேலாக அபிவிருத்தியின்றி அழிந்து வருகிறது. எனவே இறங்கு துறைப் பயணிகள், வாகனங்கள் சென்று வரக் கூடியதாக விஸ்தரிக்கப்பட வேண்டும்.

பிரதேச சபைக்குட்பட்ட 4 வீதிகள் உடன் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

நயினாதீவு கடலில் பிடிக்கப்படும் மீன் வலைகள் 80 வீதமானவை அப்பகுதி மக் களின் தேவைக்குப் பயன்படுத்த வேண் டும் என்ற கோரிக்கைகள் இந்தக் கலந் துரையாடலில் முன்வைக்கப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் யாழ். அரச அதிபருடன் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (50-95)

## நூலகக் கட்டடம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக நூல கக் கட்டடம் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள் ளது.

விஸ்தரிப்பு செய்யப்பட்ட நூலகக் கட் டடம் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உப அலுவலரான எம்.டபிள்யு.குணாளன், பொறுப்பதிகாரி எஸ்.சந்திரமௌலி, உள்ளூராட்சி உதவியா ளர் ஜெ. சோமராஜ், நூலக சேவகர் ந. நரேந் திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விஸ்தரிப்பு செய்யப்பட்ட கட்டட வேலை கள் முழுமைபெற மேலும் 3 லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. (50-95)

## பொலிகண்டியில் இன்று கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.12

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபி விருத்திக்குமான நிறுவனத்தின் ஏற்பாட் டில் 'தொழில்நுட்பப் பரிமாற்றமும் உள் ளூர் உற்பத்தியில் உணவுப் பாதுகாப்பும்' என்ற தலைப்பிலான கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை பொலிகண்டியில் இடம் பெறவுள்ளது.

பொலிகண்டிக் கிழக்குப் பலநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கண் காட்சியை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாகப் பருத்தித் துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் வீ.வீரகத்திப் பிள்ளை, சர்வதேச தொழி லாளர் சம்மேளனப் பிரதிநிதி வி.பி. தனேஸ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி மாலை 4 மணிவரை நடைபெறும்.

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.12

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திற்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பம கோரப் பட்டுள்ளது.

அதிபர் சேவையை சேர்ந்தவர்கள், ஆசிரிய சேவை தரம் I அல்லது 2-I ஐ உடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் வல யக் கல்விப் பணிப்பாளர், தீவகம், வேலணை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. புவனேந்திரன் அறிவித்துள்ளார். (50)




## சுதுமலை வடக்கு மதவடி வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை

### அதனால் போக்குவரத்து முற்றாகப் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப்.12

சுதுமலை வடக்கு, மதவடி வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மீள்புனர மைப்பு செய்யப்படவில்லை. போக்கு வரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள மேற் படி வீதியை மீள்புனரமைப்புச் செய்யுமாறு கோரி கடந்த 4 வருடத்தில் பல தடவை கள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் பயன் எதுவும் இல்லை என சுதுமலை வடக்கு -தெற்கு விவசாயிகள் சம்மேளனம் தலைவர் ஆர். குமாரகுலசிங்கம் தெரிவித் தார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் சாதாரண சூழ்நிலை யில் போக்குவரத்து இடம்பெறும்போது தான் முழுமையாக இருந்தபோதும் இவ் வீதி முன்னுரிமைப்படுத்தப்படவில்லை.

தற்போது எமது பிரதேச சபைக்குத் தார் கிடைத்துள்ளது. எனவே இவ்வருடம் சுது மலை வடக்கு-மதவடி வீதி மீள் புனர மைப்புச் செய்து தருமாறு கோரி சபை செய லாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ள துடன்- அதற்கான விளக்க வரைபடத்து டனான கடிதமும் பிரதேச சபை (மானிப் பாய்) செயலாளரிடம் வழங்கப்பட்டுள் ளது-என்றார் அவர். (50-95)

## யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாகப் பணிபுரியும்

# பளைப் பிரதேச சபை ஊழியர்களுக்கு விரைவில் சம்பளம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் தற்காலிகமாக இணைக்கப்பட்ட பளைப் பிரதேச சபையைச் சேர்ந்த ஒன்பது ஊழி யர்களுக்கு கடந்த 8 மாத சம்பளம் வழங் கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான 8 மாதங்களுக்குரிய சம்பளம் மாகாண உள்ளூராட்சி திணைக் களத்தினால் சாவகச்சேரி பிரதேச சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இக் கொடுப்பனவுகள் விரைவில் ஊழியர் களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

கடந்த 2006 ஓகஸ்ட் மாதம் ஏ-9 வீதி மூடப்பட்டதால் கடமைக்குச் செல்ல முடி யாமல் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்த பளைப் பிரதேச சபையைச் சேர்ந்த ஒன் பது ஊழியர்களும் கடந்த ஜனவரி தொடக் கம் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபை களில் தற்காலிகமாக இணைக்கப்பட்டு கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

(50-207)

## அனுமதியின்றி வெட்டப்பட்ட

# வேப்பமரங்களை ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் இளவாலைப் பொலிஸாரால் தடுத்துவைப்பு

வலி.தென் மேற்கு,பெப்.12

பிரதேச செயலரின் அனுமதிப்பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்லப் பட்ட வேப்ப மரக்குற்றிகள் இளவாலை-பெரியவிளான் பிரதான வீதியில் வைத்து இளவாலை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

வேப்ப மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற உழவு இயந்திரத்தின் சாரதியிடம் சாரதி அனு மதிப்பத்திரம், பதிவுப்புத்தகம், வரி அனுமதிப்பத்திரம் ஆகியவை இல்லாமல் இருந்ததும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனை அடுத்து இளவாலை பொலிஸார் சம்பந்தப்பட்ட சாரதியை கைது செய்து மல்லா கம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். அவரைச் சரீரப் பிணையில் செல்ல அனு மதித்த நீதிபதி வழக்கைப் பிறிதொரு திகதிக்கு ஒத்தி வைத்தார்.

உழவு இயந்திரம் வேப்ப மரக்குற்றிகள் ஏற்றப்பட்ட நிலையில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. (50-135)




தென்னிந்தியத் திருச்சபையின் செனட் மகா சபையின் கூட்டத் தொடர் கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை இந்தியாவின் விசாக பட்டணத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட தென்னிந்தியத் திருச்சபையின் பிரதம பேராயர் கலாநிதி ஜே.டபிள்யு.கிளாட்ஸ்ரோன், உதவிப் பிரதம பேராயர் கலாநிதி கிறிஸ்தோப்பர் ஆசீர், தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா, செனட் மகா சபையின் செயலாளர் அருட்திரு.மோசஸ் ஜெயகுமார் ஆகி யோருடன் மகாசபை உறுப்பினர்கள் எடுத்துக் கொண்ட படம் இது.

## வலி.தென்மேற்கு பகுதியில் தேங்காயின் விலை அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,பெப்.12

வலி.தென்மேற்கு மற்றும் வலி.மேற் குப் பிரதேசத்தில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

ஒரு தேங்காய் 45 ரூபா முதல் 60 ரூபா வரை தரத்தை பொறுத்து விற்கப்பட்டு வருகின் றது. இத் தேங்காய் விலை உயர்வினால் பாவ னையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கோதுமை மாவின் விலை கிலோ 81 ரூபாவாக அதிகரிக்கப்பட் டுள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளனர். மாவினால் செய்யப்பட்ட உண வுப் பொருள்களினதும் விலைகள் மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பாண், பணிஸ் மற்றும் பிஸ்கட் விலை களும் இதற்கேற்ற வகையில் விலை அதி கரிப்புச் செய்யப்படவுள்ளதால் ஏழை மக் கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கும் நிலை [illegible] தெரி விக்கப்படுகின்றது. (50-135)

## உடுவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டடம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் வலயம் இரண்டுக்கான புதிய கட்டடத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

சுன்னாகம் இலங்கை மின்சார சபை அலுவலகத்துக்கு அருகில் நிர்மாணிக்கப் பட்ட புதிய சமுர்த்தி வங்கிக் கட்டடத் திறப்பு விழா உடுவில் பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி தலைமையில் [illegible]

[illegible] பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரச அதிபர் நாடாவை வெட்டிக் கட்டடத்தை திறந்துவைத்தார்.

தொடர்ந்து வங்கியின் பெயர்ப்பல கையை யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரக்குமார் திரை நீக்கம் செய்துவைத்தார்.

சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் கணக்கு களை ஆரம்பித்தவர்களுக்கான கணக்குப் புத்தகங்களை யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா, பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி, உதவிப் பிரதேச செயலர் க.சோதிநாதன் ஆகியோர் வழங்கினார்கள். (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் விஞ்ஞானி விருதுபெற்ற கலாநிதி சிவயோகன் பல்துறை ஆளுமையும் அக்கறையும் கொண்டவர்

பருத்தித்துறை நகரத்திலுள்ள தும்பளைக் கிராமத்தின் மைந்தனான கலாநிதி நாகலிங்கம் சிவயோகனிற்கு விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சின் தேசிய விஞ்ஞானத் தொழில்நுட்ப ஆணைக்குழு 2006 ஆம் ஆண்டிற்கான விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தியமைக்கான அதி உயர் விருதான இளம் விஞ்ஞானி என்ற தேசிய விருதை வழங்கிக் கௌரவித்தது. இது தமிழ் மண்ணிற்குப் பெருமை தரும் விடயமுமாகும். இது கடுமையான உழைப்பின் மூலம் எதனையும் சாதிக்கலாம் என்பதற்குச் சான்றாகவும் உள்ளது.

அதியுயர் தேசிய விருது கொழும்பிலுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிலயத்தில் நடைபெற்ற விழாவில் 18.12.2007 அன்று தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி ஆர்.டி. குணரட்ண அறிமுகம் செய்து வைக்கப்பட, வாழ்நாள் பேராசிரியை நளினி பி. ரட்ணசிறியால் கலாநிதி நாகலிங்கம் சிவயோகனிற்கு விருது வழங்கப்பட்டது. விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தும் இவரது பன்முகப்பட்ட முயற்சிகளிற்காக இவ்விருது அளிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்டங்களில் விஞ்ஞானப் புதிர் வினா விடைப் போட்டிகள், விஞ்ஞானப் பேச்சுப் போட்டிகள், விஞ்ஞான கண்காட்சிப் போட்டிகள், விஞ்ஞானக் கட்டுரைப் போட்டிகள் போன்றவற்றை நடத்தி விஞ்ஞான அறிவையும் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கு இவர் செய்துவரும் சேவைக்காக இவ் விருது கிடைத்துள்ளது. இவரின் சேவைகளில் முக்கியமானதாக மாணவர் ஆய்வாளர் விருதுப் போட்டிகளை நடத்தி விஞ்ஞான ஆய்வுக் கலாசாரத்தை எமது சமூகத்தில் உருவாக்க இடைவிடாது தொடரும் பணிக்காக மேற்படி விருது கொடுக்கப்பட்டமை குறிப்பிடக்கூடியதொன்றாகும். மேற்படி போட்டிகளை நடத்தும்போது அவை பற்றிய கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதி பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் பாடுபடுவ துடன் சிறந்தவற்றை எவ்வாறு தெரிவு செய்யவேண்டும் என்பதற்கான விடயங்களை ஆழமான கருத்துகளுடன் ஆராய்ந்து ''சொட்டுப் புள்ளியிடும் பொறிமுறை'' (Quantum Marking Technique) ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளார். இது பல வருடங்களாக இன்றும் பாவனையிலுள்ளது. இவர் மேற்கூறப்பட்ட தனது விஞ்ஞான மேம்பாட்டுப் பணிநடவடிக்கைகளை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினூடாக நடத்தி வருகின்றார். யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமன்றி போர் நிறுத்த காலத்தில் (2002-2006) மேற்படி போட்டிகள் வன்னி மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க அரும்பாடுபட்டார்.

### மக்கள் பயன்பெறும் விஞ்ஞானக் கட்டுரைகள்

இவர் இதுவரை 35 இற்கும் மேற்பட்ட விஞ்ஞானக் கட்டுரைகளை எளிமையான, ஜனரஞ்சகமான முறையில் தினசரிப் பத்திரிகைகளிலும், பாடசாலை விஞ்ஞானச் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். பொது மக்களுக்கு மிகவும் பயன்படும் விதத்தில் எழுதிய வாகன ஓட்டுனர் அனுமதிப் பத்திரங்களின் அவசியம், மின்சாரக் கட்டணங்களைக் கணித்தல், தொலைபேசிக் கட்டணங்களைச் சிக்கனமாக்குதல் போன்ற கட்டுரைகள் உதயன் பத்திரிகையில் வெளிவந்தபோது பலராலும் தேடி வாசிக்கப்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. உலக பௌதிகவியல் ஆண்டான 2005 இனைக் கொண்டாடும் விதமாக 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியான அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் பற்றி உதயன் பத்திரிகையில் சிறப்புக் கட்டுரையொன்றை தொடராக பல வாரங்கள் எழுதியுள்ளார்.

பௌதிகவியலில் நடத்தப்படும் சர்வதேச போட்டியான ஒலிம்பியாட் போட்டிக்கு 2006ஆம் ஆண்டு முதல் வடபிராந்திய இணைப்பாளராக இலங்கைப் பௌதிகவியல் சங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இப் போட்டியை நடத்துவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமான கட்டுரைகளை உதயன் பத்திரிகைகளில் எழுதியும், பாடசாலைகளுக்கு நேரடியாக சென்று ஊக்குவித்தும் பங்குபற்றும் மாணவர் களது எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலிருந்து பலநூற்றுக் கணக்காக அதிகரிக்கக் கடுமையான, தன்னலமற்ற இவரது உழைப்பு பின்னணியாக இருந்தது. இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் பௌதிகவியலை பிரபலமடையவும் வைத்துள்ளார்.

### சுனாமியின் போது.....

26.12.2004 அன்று காலை பருத்தித்துறை தும்பளையின் வடக்குக் கிழக்கு கரையோரப் பகுதி மக்கள் சுனாமி அனர்த்தத்தால் அல்லோலகல்லோலப்பட்டு பரிதவித்து ஓடினர். அப்போது நெல்லியடியிலுள்ள தனது புகுந்த வீட்டில் நின்ற இவர் தொலைபேசிமூலம் அனர்த்தம் பற்றி அறிந்துகொண்டவுடன் தனது ஒலிப்பதிவுக் கருவியுடன் பொதுமக்கள் தடுக்கத் தடுக்கக் கரையோரப் பகுதிகளுக்கு விரைந்து சுனாமியின் அனர்த்தங்களை இக்கட்டானதும்,

## தக்காரர் மாண்பு

ஆபத்தானதுமான கணகளில்நின்றுகொண்டு பதிவுசெய்தார். மூன்றாவதுசுனாமி அலையின் எழுச்சியையும் சீற்றத்தையும் தத்ரூபமான துணிவுடன் பதிவு செய்துள்ளார். இது சிறந்ததொரு ஆவணப்பதிவாக இன்று காணப்படுகின்றது. சுனாமி பற்றிய தனது அனுபவங்களை உதயன் பத்திரிகை யில் தொடர்ச்சியாக எழுதிப் பதிவு செய்ததுடன் எதிர்காலங்களில் செய்ய வேண்டிய பாதுகாப்பு சம்பந்தமான ஆலோசனைகளையும் வழங்கினார்.

அத்துடன் சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு தொலைபேசி மூலம் செவ்வி வழங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவ வேண்டும் என உலக நாடுகளிடம் கோரிக்கையும் விட்டார்.



### சமூகத் தொண்டு

கல்வி தவிர்ந்த இவரது ஏனைய நடடிக்கைகளும் பாராட்டுதற்குரியன. 1980- 1985 ஆண்டுகளில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்து இளைஞர்களை விளையாட்டுத்துறையில் ஊக்கப்படுத்தியதோடு பல சமூகப் பணிகளையும் முன்னெடுத்தார். குறிப்பாக தும்பளை வீதி கவனிப்பாரற்று பழுதடைந்திருந்த வேளை இளைஞர் களை ஒன்று திரட்டி வீதியை செப்பம் செய்ததோடு அண்மைக் காலத்திலும் மீண்டும் பழுதடைந்த வேளை அது பற்றி உத யன் பத்திரிகையில் சுட்டிக் காட்டி நடவடிக்கை எடுக்கவைத்தார். மேலும் திருடர்கள் தொல்லை அதிகரித்தபோது விழிப்புக் குழுக்களை அமைத்து கெடுபிடிக ளுக்கு மத்தியிலும் ஊரை இரவிரவாகக் காவல் காத்ததை மக்கள் இன்றும் நினைவு கூருகிறார்கள்.

கலாநிதி நா.சிவயோகன் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை முறையே தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாசாலை, ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றிலும் தனது உயர் பட்டப்படிப்புகளையும் கலாநிதி பட் டத்தையும் இந்தியாவின் ஜெய்ப்பூரிலுள்ள இராஜஸ்தான் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டவர். பல்வேறு தேச மாணவர்களுடன் ஒன்றாகப் படித் தும், பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டும் தனது சமூக நோக்கிலான செயற்பாட்டு ஆளுமையை வளர்த்துக் கொண்டுள்ளதை இவரில் அவ தானிக்க முடிகிறது.

*

பா.இரகுவரன்
(ஆசிரியர்- ஹாட்லிக் கல்லூரி ).

## தென்மராட்சியில் வலுக்குறைந்தோருக்கு உதவிகள்

தென்மராட்சி பிரதேசத்தில் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த - மூக்குக் கண்ணாடி, காது கேட்கும் கருவி, தள்ளு வண்டி ஆகியவை தேவைப்படுபவர்களுக்கு அவை இலவசமாக வழங்கவுள்ளனர்.

கண்பார்வையில் குறைபாடு உள்ளவர்கள் கேட்கும் சக்தி குறைந்தவர்கள் நடக்க முடியாதவர்கள் ஆகியோர் உரிய மருத்துவச் சான்றிதழை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள் ளனர்.

ஏற்கனவே மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பித்த ஏழு பேருக்கு மூக்குக் கண்ணாடியும் ஒருவருக்கு காது கேட்கும் கருவியும் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (202-207)

## வாய்மொழிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.12

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2007ஆம் ஆண்டு நடதப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்கான சிங்கள மொழிப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சை நாளை மறுதினம் வியாழக் கிழமையும் எதிர் வரும் சனிக் கிழமையும் யாழ்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (1)


## கண்ணீர் அஞ்சலி



பலாலி ஆசிரியர் கலாசாலையின்
ஆங்கில நெறி பகுதித் தலைவர்
திருமதி இ. இராமச்சந்திரா
அவர்களின் அன்பு மைத்துனர்
அமரர் றோகான் இராஜசிங்கம்
(விளையாட்டு அதிகாரி)

அவர்களது திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்று கலங்கி நிற்கின்றோம். அவரது இழப்பால் துயரக் கடலில் மூழ்கியுள்ள அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆங்கில நெறி
பலாலி ஆசிரியர் கலாசாலை



## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு
அதிகாரியும் புகழ்பூத்த சகலதுறை
விளையாட்டு வீரருமான
அமரர்
றோகான் இராஜசிங்கம்

அவர்கள் சென்னையில் திடீர் மரணம் அடைந்ததையிட்டு நாம் அதிர்ச்சி அடைகின் றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விளையாட்டுக் கொரு வித்தகனாய்
விறுகொண்டெழுந்த வீரனே!
வினைத்திறனுடன் விறுநடைபோட்ட வீரசிங்கமே!
விண்ணுக்கு மகுடம் சூட்ட விரைந்தனையோ

S.Ramanan,
NEW POWER WORLD
SPORTS CENTRE
THIRUNELVELY.

(71015)



## மணமகள் தேவை

தொடர்பு:-விளம்பர இல:-3060
மே/பா உதயன் (71035)



## இந்தியாவில் பிருந்தாவன் கல்லூரியில் படியுங்கள்

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

உயர்தரம் A/L 2 சித்திகளுடன்

பதிவுகள் இப்பொழுது நடைபெறுகின்றன

SMS 011 - 4520270 Name & Address for details
Contact: 0777 317043
Company Secretarial Services (Pvt) Ltd.



## மணமகள் தேவை

1946ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமுள்ள, 50% பாவமுடைய, சட்டப்படி விவாகம் நீக்கியவர். யாழில் ஒரு ஸ்தாபனத்தில் களஞ்சியப் பாதுகாவலர் + இரவு வாச்சராகப் பணிபுரிபவருக்கு வயது 40 - 56 இற்கு இடைப்பட்ட தாரமிழந்தவர் தேவை. தரகர் தேவையில்லை. முதல் கடிதத்தில் வீட்டு விலாசத்துடன் விவரங்களை அனுப்பவும்.
உதயன் விளம்பர இல. 3059.
யாழ்ப்பாணம்.
(70819)


## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா மாக்கஸ்வில்பிறட்



கூழாவடி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா மாக்கஸ்வில்பிறட் அவர்கள் 10.02.2008 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோண் - மரியமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற மனவல் மாக்கஸ் வில்பிறட் அவர்களின் மனைவியும் றூபினா, றேவா, றூபன், றேமன், லிற்றி, றஜி ஆகியோரின் பாசமிகு தாயும் சிவபிரான், பதமசேகர், லினற், மோனா, றாஜா, குவின்ரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை றொபேட், ஜோர்ஜ் ஆகியோரின் சகோதரியும் அத்தீனா, அர்ஜுன், அருண், அலன், ஆன்சி, டானியல், பிறேபன் பேர்ளின் றெஜி னோல்ட், ஜறின் ஆகியோரின் பேர்த்தியும் றெமுவோல்டர், விக்ரர், ஏணஸ்ற் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று 11.02.2008 திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''குளோறிஎக்ஸ்''
கூழாவடி, ஆனைக்கோட்டை.
தொ.பே 060 2217912

தகவல்: குடும்பத்தினர்

(71032)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு செல்லப்பா



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் 35/8, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப் பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்லப்பா 09.02.2008 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் சிந்தாமணியின் அன்புக் கணவரும் குணமதனகல்யாணி, கயிலநாதன், சாந்தசரோஜா (அமரர்) கமல சுந்தரி ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம் (அமரர்), சிவபாக்கியம், பற்குணநாதன் ஆகியோரின் மாமனும் கிருஷ்ண மோகன், மஞ்சுளாதேவி, மதனிகா, மர்மதனி, ரூபரஜனி, பர்மதனி, கோகிலறஞ்சன், பர்மிலா, வித்தகன், பவித்திரா, சிவஞானவல்லி, விமலேந்திரன், பசுபதீஸ்வரன், ராஜானந்தன், வசீகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் திவியந்தன், திபியந்தன், மதுராங்கன், காருணி, காருண்யன், சுவேதிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு 35/8, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/8, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செ.கயிலநாதன் (மகன்),
த.கிருஷ்ணமோகன் (பேரன்).

(71042)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மெய்வன்மைப் போட்டியும் பெயர் வளைவு திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன. பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் சான்றிதழ்களை வழங்குவதையும் விருந்தினர்கள் பெயர் வளைவுக்கு அருகில் காணப்படுவதையும் படங்களில் காணலாம். (படம்:சுந்தா)

## மேசைப்பந்தாட்டம் யூனியன் சம்பியன்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்குஇடையேஇடம்பெற்ற 19வயதுப் பிரிவு ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் அருணோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

மூன்று நேர் செற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் முதல் இரண்டு செற்றுக்களை இரு அணிகளும் தலா ஒவ்வொன்றைப் பெற்றுக் கொண்ட நிலையில் மூன்றாவது செற் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றபோதிலும் 3 ஆவது சுற்றை யூனியன் கல்லூரி பெற்றுக் கொண்டது.

யூனியன் கல்லூரி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டு வலிகாமம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (1-86)

**விளையாட்டு அரங்குகளில்**



கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டி நிகழ்வு அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேலை விளையாட்டுக் குழுச்செயலாளர் கு.ஜெகதீஸ்வரன் கைலாகு கொடுத்து வரவேற்கும் காட்சியினையும் அருகில் அதிபர் உட்படப் பின்னணியில் கோப்பாய் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் எஸ்.மகேஸ்வரதாஸ் மற்றும் அதிபர்கள் சூழ வருவதையும் படத்தில் காணலாம். (1)

# யாழ்ப்பாணம் கல்வி வலய உதைபந்தாட்டம்; இரு பிரிவுகளிலும் சென்.பற்றிக்ஸ் சம்பியனானது

வலி.வடக்கு,பெப்.12

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளின் 16,18 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் கல்வி வலயச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

16 வயதுப்பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் சென்.சாள்ஸ் ம.வியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம வலிமையுடன் மோதிக்கொண்டமையால் இறுதி வரை போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. இரு அணிகளும் கோல்கள் பெறும் வாய்ப்புகளைத் தவறவிட்ட போதிலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி தனக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கோலைப் பெற்று முன்னிலையில் நின்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி சமூகம் அளிக்காத நிலையில் கொக்குவில் இந்துக் கல்லூரி 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

18 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் சென்.பற்றிக்ஸ் கல்லூரி கோல்கள் பெறும் முயற்சியில் துரிதமாக ஈடுபட்டது.

எனினும், யாழ்.மத்திய கல்லூரி வீரர்கள் தடுத்து விளையாடி கோல்கள் பெறும் வாய்ப்புக்களை இல்லாது செய்தார்கள்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் கோல்கள் பெறும் வாய்ப்பையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களுக்கு வழங்காது போட்டி முடிவடையும் வரை இரு அணிகளும் பெரு முயற்சி எடுத்தும் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதைகளைத் தொடர்ந்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி 4:2 என்ற கோல்கள் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வெற்றி பெற்று யாழ்ப்பாணம் கல்வி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் உரும்பிராய் இந்துக்கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டதில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆனால் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்து இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் பாடசாலையை விட்டு விலகிய வீரர் ஒருவரும் ஒருவருக்கும் தெரியாது அணியில் விளையாடியமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 3 ஆம் இடத்தை உரும்பிராய் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது. (1-86)

# சண்டிலிப்பாய் பிரதேச மென்பந்தாட்டம்; சில்லாலை கிறிஸ்துராசா வெற்றி

யாழ்ப்பாணம்,பெப்.12

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சில்லாலை கிறிஸ்துராசா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று இந்தாண்டுக்கான பிரதேச செயலக சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சில்லாலை கிறிஸ்துராசா விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

9 பேர் பங்குபற்றும் ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய போட்டியாக இப்போட்டி அமைந்திருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறிஸ்துராசா விளையாட்டுக்கழகம் 7.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பபி 17 ஓட்டங்களையும் குபேந்திரன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்துவீசிய விகிதரன் 1.4 ஓவர்களுக்கு 9 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் லோகேஸ் 2 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மற்றும் டேமியன், சுதாகரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் 8 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

வாகீசன் 14 ஓட்டங்களையும் லோகேஸ் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள். கிறிஸ்துராசா விளையாட்டுக்கழகத்தின் சார்பில் பந்துவீசி ஜெனாட் 2ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் சிறீகரன் 2 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# பாடசாலைகள் 17வயது கிரிக்கெட்; கொக்குவில் இந்துவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

வலி.வடக்கு,பெப்.12

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி இன்னிங்ஸினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 31.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் டார்வின், சுபநேசன் ஆகியோர் முறையே 16,12 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி வீரர் செந்தூரன் 7.5 ஓவர்கள் பந்துவீசி ஓட்டமற்ற ஓவருடன் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் தனுசன் 7 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 8 ஓட்டங்களுடன் 2 விக்கெட்டையும் புவிராஜ், லோகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 40 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய ஆதித்தன், வவிசன் ஆகியோரின் முறையே 74, 11 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் ஜெயந்தன் 13 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 46 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் மற்றும் டார்வின், தவாநந்தன் ஆகியோர் முறையே 2,1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 23 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் தனுசன் 5.2 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 5 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டையும் நிரோசன் 2 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டத்திற்கு 3 விக்கெட்டையும் பி.செந்தூரன் 7 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் ஓர் ஓட்டத்திற்கு 3 விக்கெட்டையும் கைப்பற்றினர். (1-86)

# 15 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டப் போட்டியில் நீர்வேலி அத்தியார் கல்லூரி சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப்.12

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி 12:6 என்ற புள்ளிகள் கணக்கில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை வெற்றி கொண்டு கோப்பாய் கல்விக்கோட்ட 15வயதுப் பிரிவுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமும் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயமும் மோதிக் கொண்டதில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் 8:5 என்ற புள்ளிக் கணக்கில் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 13 பாடசாலைகள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமங்களில் கணனி அறிவை மேம்படுத்துவதன் மூலம் கல்விப்பெறுமான வெளியீட்டை அதிகரிக்கலாம்

## வலிகாமம் வலயப் பணிப்பாளர் ஆலோசனை

யாழ்ப்பாணம்,பெப்.12

கிராமங்களிலும் கணனி அறிவை மேம்பாடடையச் செய்யவேண்டும். அதன் மூலம் உண்மையான கல்விப் பெறுமான வெளியீட்டைக் கொண்டு வரமுடியும்.

வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

நவாலி மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது புதிய கல்விக்கொள்கை - புதிய கல்விச் சிந்தனைகளின்படி கிராமத்தை வலுவுடையதாக்கி - அக்கிராமத்து இளைஞர்களைப் பலப்படுத்தி அவர்களுக்கு ஊடாக உண்மையான வெளிப்பாட்டை கொண்டுவரவேண்டும் என்பதாகும்.

அந்தவகையில்தான் நவாலி மகா வித்தியாலயத்திற்கு புதிய விஞ்ஞான ஆய்வுகூடம் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு கணனி அறிவும் கிராமப்புற பாடசாலைகளுக்கு கொண்டுவருவதற்கு சகலரும் முன்வரவேண்டும்.

அவ்வாறான வெளிப்பாட்டின் ஊடாக உண்மையான பெறுமானத்தை விரைவாக அடையலாம் - என்றார்.

பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் உரையாற்றுகையில்:

எமது பாடசாலை விரைவில் ஜி.சீ.ஈ உயர்தரப் பாடசாலையாக மாற்றம் பெற வேண்டும். அதற்கேற்ற ஆளணிகளைத் தற்போது வரையறை செய்துள்ளோம்.

வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக இந்த முயற்சி பலனளித்து நவாலி மக்கள் பெரும்பலன் அடைந்து சமூகம் முன்னேற வேண்டும் எனத் தெரிவித்தார். (202-95)

## நல்லூர் பிரதேச சபைக்கு புதிய செயலாளர்

வலி.தென்மேற்கு,பெப்.12

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றிய மே.சாந்தசீலன் கடந்தவாரம் முதல் நல்லூர் பிரதேச சபை செயலாளராக பதவியேற்றுள்ளார். வலி.தென்மேற்கு பிரதேச சபையின் புதிய செயலாளராக திருமதி பு.சிவலிங்கம் பதவி ஏற்றுள்ளார்.

இதேவேளை நல்லூர் பிரதேச சபையின் செயலாளராக கடந்த பல வருடங்களாகப் பதவி வகித்து வந்த பொ.வைரமுத்து தமது 60ஆவது வயதில் கடந்த வாரம் ஓய்வுபெற்றுள்ளார். (203-135)


**இதோ!**

**சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!**

**தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாசநாளங்களில் உண்டாகும்சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகியநோய்களை விரைவில்குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.**

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி/54169)


## வாழ்வாதார உதவிகள்

வலி.தென்மேற்கு பெப்.12

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் கணவரை இழந்த அல்லது கணவரால் கைவிடப்பட்ட குடும்பங்களில் பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகள் இருக்கும் பட்சத்தில் அந்தக் குடும்ப உறுப்பினர்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவாக தலா ஆயிரத்து இரு நூறு ரூபாவை வழங்க சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் முன்வந்துள்ளது.

ஆறு மாத காலத்திற்கு இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான பயனாளிகள் தெரிவு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வலி. தென்மேற்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-135)

## வலி.கிழக்கில் பாதீனியம் ஒழிப்பு கிராமசேவையாளரின் மேற்பார்வையில்

நீர்வேலி,பெப்.12

வலி.கிழக்குப் பகுதியில் கிராம சேவையாளர்களின் மேற்பார்வையில் பாதீனியம் ஒழிப்பை முன்னெடுப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

வலிகிழக்கு பிரதேச சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வலி.கிழக்கு பிரதேசச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாதாந்தம் இடம் பெறும் பிரதேச ஒருங்கிணைப்புக் கூடத்தைத் தொடர்ந்து இக்கூட்டம் அதன் தலைவரும் பிரதேசச் செயலருமாகிய சி.ஏ. மோகன்றாஸ் தலைமையில் இடம்பெற்றது.

பெரும்பாலான குழு உறுப்பினர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் முக்கியமாக பாதீனியம் ஒழிப்பு, ஒலிபெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டன. இரு விடயங்களை அப்பகுதி கிராம அலுவலர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படுத்துவது என்றும், குழு அதற்கான ஒத்துழைப்பை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

முக்கிய குழு உறுப்பினர்கள் வரிசையில் பிரதேச சபைச் செயலாளர், பிரதேசமட்ட சுகாதார வைத்திய அதிகாரியின் பிரதிநிதி, கோட்டக்கல்வி அலுவலரின் பிரதிநிதி சுற்றுச்சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் போன்றோருடன் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கிராம அலுவலர்களும் கலந்துகொண்டதோடு, நலன்புரி நிலைய சார்பிலும் உறுப்பினர்கள் வருகை தந்து கருத்துத் தெரிவித்திருந்தனர். (1-110)

## முதியோர் நலன்புரிச்சங்க சேவை நிலையம் திறப்பு


வடமராட்சி,பெப்.12

வடமராட்சி முதியோர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்க சேவை விற்பனை நிலையத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி பழைய சந்தைக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் பிரதமவிருந்தினராகவும், நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் த.சிதம்பரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (203-160)

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 ✱ 10 ✱ 1910



மறைவு 11 ✱ 02 ✱ 1989

**அமரர் செல்லப்பா ஆறுமுகம்**

*(கற்புலத்து மனோன்மணியம்பாள் கோயில் முன்னாள் தர்மகர்த்தாவும் மற்றும் சட்டத்தரணியும்)*

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்களை
மறக்கமுடியாதப்பா
கடலலைகள் ஓய்ந்து போனாலும் - என்
நினைவலைகள் ஓயவில்லையப்பா.

72/12, பிரம்படி வீதி,
கொக்குவில். (71029)

அன்பு மகள்
**ஆ.சரோஜினிதேவி.**

## “விழித்தெழு, விழித்தெழு, உன் ஆற்றலை அணிந்துகொள்”

நாம் உமது ஆலய வழிபாடுகளில் ஒரு பாடல் பாடுகின்றோம். “செபிக்க சொல்லித் தாரும் இயேசுவே, இயேசுவே, நடக்கச் சொல்லித் தாரும் இயேசுவே, இயேசுவே” என்று. ஆம் இன்று இயேசு என் செப வாழ்வைப்பற்றி சிந்திக்க, செபத்தின் மீது நான் கொண்டிருக்கும் நம்பிக்கையை ஆராய என்னைஅழைக்கிறார். செபவாழ்வின் அத்திவாரம் விசுவாசம். இவ்விசுவாசத்தில் நான் உறுதி பெற ஆண்டவர் முதலில் என்னிடம் வலியுறுத்துவது நான் மனிதர்கள் மட்டில் கொள்ளவேண்டிய உறவு நிலையையே.





நான் எவ்வகை இறை அறிமுக அனுபவத்தை பெற்றிருக்கின்றேன்? நான் இறைவனோடு ஓர் ‘ஆள்’ வகை உறவைக் கொண்டுள்ளேனா, அல்லது இறைவன் எங்கோ தூரத்தில் எனக்கு எட்டாதவராகக் காட்சி தருகின்றாரா? நான் இறைவனை என் வாழ்விற்குள்தான் கண்டடைய வேண்டும், ஏனெனில் இறைவன் ஏற்கனவே என்னோடு, என்னுள் இருக்கிறார் இறைவனே என் அப்பன், அம்மை எனும் ஆள் நிறை உறவை எமது அனுபவமாக கொள்வோம்.

என் செபவாழ்வு அது என் வாழ்வின்முழுமை, செபத்தில் இருந்து என் வாழ்வுச் செயற்பாட்டை வேறாக்க முடியாது. வாழ்வின் செயற்பாடுகளிலிருந்து செபத்தை பிரித்துப் பார்க்கவும் முடியாது.

என் அன்பான ஆண்டவரே, இயேசுவே, என் இதய ஆழத்தில் இருந்து உம்மோடு நான் கதைக்க எனக்குக் கற்றுத்தாரும். நான் யார் யாரையெல்லாம் அன்பு செய்ய முடியாமல் இருக்கின்றேனோ அவர்களிற்காகவும் தேவையில் இருப்போருக்காகவும், செபிக்க கற்றுத்தாரும். ஆண்டவரே, நான்செபிப்பதை செயல்ப்படுத்த ஆற்றல்தாரும்.செபவாழ்வில் நிலைத்து நிற்க வரம் தாரும். உம்மிடத்தில்-இருந்து நான் பெற்றுக்கொள்ளும் ஆசீரை நான் மற்றவரோடு பகிர உதவி செய்யும்.

அருட்திரு.ஜொன்போர் CMF.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**திருமதி காந்தம்மா சோமசுந்தரம்**

தோற்றம் 05 ✱ 06 ✱ 1922

மறைவு 13 ✱ 01 ✱ 2008



*கடந்த 13.01.2008 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும், தொலைபேசியில் ஆறுதல் கூறியோருக்கும், நோயுற்றிருந்த வேளையில் மருத்துவ உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு இன்று (12.02.2008) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.*

பார் மீது எமை ஈன்று
பக்குவமாய் வளர்த்தெடுத்து
ஊர் புகழ வாழ வைத்து
உற்றார் உறவினரை ஆதரித்து

போர் சூழ்ந்த காலந்தனிலும்
துணை எமக்கென்றிருந்தீர்
யார் உறவு எமக்கு இருந்தென்ன
உமது அன்புக்கு அவை ஈடாகுமா?

தற்போதைய முகவரி:
82, பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு.

நிரந்தர முகவரி:
வேலணை மேற்கு,
வேலணை - 06.

குடும்பத்தினர். (71022)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**வேலுகுட்டி ஜெகதீசன்**

*(அதிபர், சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்)*

அன்னையின் மடியில் 01 ✱ 11 ✱ 1957

ஆண்டவனின் அடியில் 24 ✱ 01 ✱ 2007

திதி: தைமாதம் அபரபக்க ஷஷ்டி



**அன்னை மடியில் ஐம்பத்து ஏழில் தவழ்ந்து அன்பைப் பணியில் பண்பில் வளர்த்து - நாளும் மேன்மை வழியில் ஆசிரிய அதிபர் சேவையில் பான்மையுற வாழ்ந்து அமர்ந்தார் பரமனடி.**

சங்கானை மேற்கு,
நிற்சாமம், சங்கானை. (சி/551428)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பொருளாதாரம் போகும் போக்கு

பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் தற்போதைய அரசினால் நாட்டின் பணவீக்கம் எகிறுகின்றது.

கடந்த வருடம் சராசரிப் பணவீக்கம் 21.6 வீதமாகும். நவம்பரில் மாத்திரம் அது 26. 2 வீதத்தைத் தொட்டு நின்றதாக அதிர்ச்சித் தகவல்.

2008 இல் நாட்டின் பணவீக்கத்தை பத்து முதல் பதினொரு வீதத்துக்குள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் போவதாக மனக்கோட்டை கட்டிய இலங்கை மத்தியவங்கி அந்த நம்பிக்கையை வருடம் பிறந்து ஒன்றரை மாத காலம் முடிவதற்குள்ளேயே கோட்டை விட்டுவிட்டது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் பணவீக்கம் 16 முதல் 20 வீதமாக இருக்கும் என்று இப்போதே ஒப்புக்கொள்ளும் அளவுக்கு அது வந்து விட்டது. ஆனால் உண்மையில் - யதார்த்தத்தில் - அந்தப் பெறுபேறு நிச்சயம் இருபது முதல் இருபத்தியைந்து வீதத்தைத் தாண்டும் என்று உறுதி கூறுகின்றன பொருளாதார நிபுணத்துவ வட்டாரங்கள்.

இந்தப் பிராந்தியத்தில் - தெற்காசிய பிரதேசங்களில் - ஆகக் கூடுதலான பண வீக்கத்தை வெளிப்படுத்தும் - மோசமான பொருளாதார நிலையில் இருக்கும் - தேசம் என்ற பெருமையை இலங்கையே தட்டிச் செல்கின்றது.

இத்துணை சனத்தொகையையும், பின்தங்கிய கிராமங்களையும் கொண்ட இந்தியா கூட தனது பணவீக்கத்தை 6 வீதத்துக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றது.

இப்பிரதேசத்தில் இலங்கைக்கு அடுத்து மோசமான பணவீக்க அதிகரிப்பைக் கொண்ட நாடாக பங்களாதேஷ் விளங்குகின்றது. அங்கு கூட பணவீக்கம் 11 வீதம்தான். ஆனால் அதன் இரட்டிப்பு மடங்கில் முன்னிலை வகிக்கின்றது இலங்கை.

ஒரு புறம் கண், மண் தெரியாமல் யுத்தத்துக்கு - போர் வெறித் தீவிரத்துக்கு - நாட்டின் பொருளாதார வளத்தைக் கபளீகரம் செய்யும் செயற்பாடுகள்.

மறுபுறம், எங்கும் ஊழல், எதிலும் மோசடி, எவற்றிலும் லஞ்சம் என்று அதிகாரத் துஷ்பிரயோகங்கள், குளறுபடித்தனங்கள்.

இன்னொரு புறம் தவறான பொருளாதாரக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்ற அவலம். தனிநபர்களின் விருப்பு, வெறுப்புக்காக வகுக்கப்படும் பொருளாதாரக் கொள்கைகள் தீர்க்க தரிசனத்துடனும், யதார்த்தப் புறநிலைகளுக்கு அமைவாகவும் நடைமுறைப்படுத்தப் படுவதேயில்லை.

உதாரணத்துக்கு, தேவைப்படும் போதெல்லாம் - கணக்கு வழக்கின்றி - பணத்தை - புது ரூபா நோட்டுக்களை - கண் மண் தெரியாமல் அச்சிட்டுத்தள்ளி, அவற்றை சர்வசாதாரணமாகப் புழக்கத்துக்கு விடும் கோமாளித்தனத்தைக் குறிப்பிடலாம்.

இவையெல்லாம் சேர்ந்து நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையின் மைய நாணையே சிதறடிக்கச் செய்துவிட்டன.

வெளிநாட்டு முதலீடுகளை நட்புறவுடன் அரவணைக்கும் போக்கு இல்லாத காரணத்தாலும் அதற்கான அரசியல், களநிலை யதார்த்தங்கள் காணப்படாமையாலும் புதிய முதலீடுகள் இல்லாமற் போகின்றன. பழைய முதலீடுகளும் வாபஸ் பெறப்படும் அலங்கோல நிலைமை.

'செல்லும் செல்லாததற்கெல்லாம் செட்டியார் பொறுப்பு' என்பது போல உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பாலேயே இங்கு இந்த இக்கட்டு என்ற சாக்குப் போக்கு வேறு.

இதேபோன்ற சர்வதேச எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்கொள்ளும் இந்தோனேஷியாவினாலும், தாய்லாந்தினாலும், பிலிப்பைன்ஸினாலும் கூட பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமானால், அதையே காரணம் காட்டி பணவீக்கத்தை தவிர்க்கமுடியாதது எனக் கொழும்பு அரசு நியாயப்படுத்துவதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

நாட்டில் ஒரு பக்கத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு. மறுபக்கத்தில் மின் உற்பத்திக்கான மானியம் வெட்டப்பட்டதால் சராசரி 40 வீத மின் கட்டண அதிகரிப்பு இன்னும் மூன்றுவார காலத்துக்குள் நடைமுறைக்கு வரப்போகின்றது. தவிரவும் அரிசி, மா, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் எக்கச்சக்கமாக உயர்ந்து விட்டன. போரினால் பொருளாதார அபிவிருத்தி செத்து விட்டது.

இந்தப் பின்னணியில் வருடாந்தப் பணவீக்கம் 25 வீதத்தைத் தாண்டுவது நிச்சயமாகத் தவிர்க்க முடியாத நிதர்சனமாகப் போகின்றது.

இதேவேளை, தன்னுடைய போர்வெறிப் போக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகத் தினசரி அறுபது கோடி ரூபாவை யுத்தத்தின் பெயரால் நாசமாக்குகின்றது அரசு. அதாவது ஒவ்வொரு நிமிடத்துக்குச் சராசரி 40 லட்சம் ரூபா வீணே செலவாகிக் கரைந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் இந்த நெருக்கடியெல்லாம் தற்காலிகமானவை, விரைவில் 'வடபகுதிப் பயங்கரவாதிகளை' கூண்டோடு அழித்து, அமைதியை மீட்டு, சமாதானத்தை எட்டி, பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்தி விடுவோம் என்று சூளுரைத்துக் கொண்டிருக்கின்றார் நாட்டின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கையில் கிடைத்த பொரிமாத்தோண்டியையும் கனவு கண்டு போட்டுடைத்த ஆண்டி மாதிரி, நாடும் அவரது இந்தக் கனவு நனவாகும் வரை காத்திருந்து ஏமாற வேண்டியதுதான்.

# ஐ.நா. பாதுகாப்புச் சபை 21ஆம் திகதி கூடுகின்றது

### இலங்கை நிலைபற்றி ஆராய்வு

கொழும்பு,பெப்.12

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் செயற்குழு எதிர்வரும் 21 ஆம் திகதி நியூயோர்க்கில் கூடுகின்றது. இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஆயுத மோதலில் சிக்கியுள்ள சிறுவர்கள் குறித்து மேற்கொள்ளபட்ட நடவடிக்கைகள் பற்றி இதன்போது ஆராயப்படவுள்ளது.

இலங்கை நிலைவரம் குறித்த விவாதம் ஆரம்பமாகும் வேளை ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் உரையாற்றவுள்ளார். சட்டமா அதிபர் மற்றும் சொலிசிஸ்டர் ஜெனரல் ஆகியோரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது ஐக்கிய நாடுகளின் இலங்கை குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்குத் தீர்வுகாண்பதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இவர்கள் தெளிவுபடுத்துவார்கள்.

அரசு சிறுவர்களை படையணிகளில் சேர்த்துக் கொள்வதை முற்றிலும் நிராகரிக்கின்றது. இதில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கத் தயாராகவுள்ளது என இவர்கள் தெரிவிக்கக்கூடும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனினும், ஐக்கிய நாடுகளினால் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிள்ளையான் குழுவுடன் அரசு தேர்தல் கூட்டணி வைத்துள்ளதால் ஐக்கிய நாடுகளின் கேள்விகள் சிலவற்றிற்குப் பதிலளிப்பதில் அது நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(சி)

# தமிழகத்தில் புலிகளின் ஊடுருவல் கிடையாது

### மாநிலப் பொலிஸ் ஆணையாளர் தெரிவிப்பு

சென்னை ,பெப். 12

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் ஊடுருவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தமிழகப் பொலிஸ் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் கூறியவை வருமாறு:-

விடுதலைப்புலிகளின் ஊடுருவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடலோரப் பகுதிகளில் கியூப்பிரிவு மற்றும் கடலோரக் காவல் படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு,அவர்களுக்கு வெடிகுண்டு மற்றும் ஆயுத உதவிகளைச் செய்பவர்களையும் பொலிஸார் கண்காணித்து அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

இப்படியிருக்கும்போது ஊடகங்களில் மட்டுமே 'விடுதலைப் புலிகள் தமிழகத்தில் ஊடுருவல்' என்ற செய்தி வந்தவண்ணம் உள்ளது. அப்படியான சம்பவங்கள் இடம்பெற வாய்ப்பே இல்லை என அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழகத்தில் சட்டம்,ஒழுங்கு கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது,கூலிப் படையினரின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு,ரெளடிகளின் அட்டகாசங்களுக்கு பாரபட்சமின்றி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கள்ளத் தொடர்பு,மனஅழுத்தம், பொறுமை இழப்பு போன்ற காரணங்களால் கொலை, தற்கொலை போன்றவை அதிகரித்து வருகின்றன.

இதனைத் தடுக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## இனத்துவ கற்கை நிறுவன பணிப்பாளரின் விஸா ரத்து

சர்வதேச இனத்துவ கற்கை நெறிகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ரமாமணியின் விஸா, புலனாய்வு வட்டாரங்களின் பரிந்துரையின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என குடிவரவு - குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் பி.பி.அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

ரமாமணியின் விஸா இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் அதனை நீடிக்க வேண்டுமெனக் கோரியிருந்தார் என பி.பி. அபயகோன் தெரிவித்துள்ளார்.

ரமாமணி இரண்டு வாரகால நீடிப்பைக் கோரினார் எனவும், எனினும் புலனாய்வு அமைப்புகளின் பரிந்துரையின் கீழ் அவரிற்கு ஐந்து நாட்கள் மாத்திரம் விஸா வழங்கிய பின்னர் அவரது விஸாவை முழுமையாக ரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# சிறப்பு அ'அட்டைகள் தமிழருக்கு வழங்குக!

### ஹெல உறுமயக் கட்சி வலியுறுத்து

கொழும்பு,பெப்.12

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு என சிறப்பு அடையாள அட்டைகளை வழங்கவேண்டும்.

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அக்கட்சியின் பேச்சாளர் சிறி வர்ணசிங்க கடந்த சனிக்கிழமை தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்களுக்கு என சிறப்பான அடையாள அட்டைகளை வழங்குமாறு கேட்கவுள்ளோம். இது தொடர்பான திட்டம் ஒன்றையும் நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளோம்.

நாட்டின் பாதுகாப்புக் காரணங்களுக்காக நாம் இத்திட்டத்தைக் கோரி வருகின்றோம். தற்போதுள்ள நிலையில் இது மிக அவசியமானது - என்றார். (க-9)

## ப.நோ.கூ. சங்கங்களுக்கு கோதுமை மா விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ். மாவட்டத்திற்குக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கோதுமை மா மாவட்டத்திலுள்ள 24 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

கோதுமை மாவைப் பெறுவதற்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ. சங்கங்கள் மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என திட்டப் பணிப்பாளர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார். (50)

# களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் மோதல்

### நாற்பது பேர் வரை வைத்தியசாலையில்!

கொழும்பு,பெப்.12

களனிப் பல்கலைக்கழக மாணவ குழுக்களுக்கு இடையில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதலில் நாற்பது மாணவர்கள் காயமடைந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களனிப் பல்கலைக்கழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட புதிய மாணவ சங்கத்திற்கு எதிராக இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்று களனி விஞ்ஞான பீட மாணவ சங்கத் தலைவர் தெரிவித்தார்.

மோதல் சம்பவத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்வது தொடர்பான விசாரணைகளை கிரிபத்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

### நாளை

| | |
|---|---|
| மாசி - 01 | 13.02.2008 |
| | புதன்கிழமை |
| திதி :சப்தமி | முன்னிரவு 11.17 வரை |
| நட்சத்திரம் : | பரணி |
| | பின்னிரவு 03.05 |
| [illegible] | 05.04-06.34 |
| [illegible] | 12.34-02.04 |

# இலங்கையில் பயணம் செய்வது குறித்து அமெ. தன் பிரஜைகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 12

இலங்கையில் பஸ் மற்றும் ரயில்களில் பயணம் செய்வதை அமெரிக்கப் பிரஜைகள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்வது குறித்து அமெரிக்கா விடுத்துள்ள முன்னெச்சரிக்கை அறிவிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைக்கு பயணம் செய்வதில் உள்ள அபாயம் குறித்து மிகவும் அவதானமாகப் பரிசீலிக்குமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தனது பிரஜைகளை வலியுறுத்துகின்றது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வது குறித்து அமெரிக்கர்கள் விசேடமாக எச்சரிக்கப்படுகின்றனர்.

அமெரிக்கப் பிரஜைகள் அல்லது நிறுவனங்கள் இலக்குவைக்கப் படுவதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லாத போதிலும், பிழையான இடத்தில் பிழையான நேரத்தில் நிற்பதால் அமெரிக்கப் பிரஜைகளும் வன் முறையில் சிக்குவதற்கான சாத்திய முள்ளது.

அமெரிக்கப் பிரஜைகள் அரசியல் கூட்டங்கள், இராணுவ நிலைகள், அரச, இராணுவ வாகனத் தொடரணிகள் போன்றவற்றை நெருங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவையே விடுதலைப் புலிகளினால் அடிக்கடி தாக்கப்படுகின்றன.

பொதுமக்கள் பயணம் மேற்கொள்ளும் பஸ்கள், ரயில்கள் என்பவற்றின் மீதான தாக்குதல் காரணமாக, அமெரிக்கப் பிரஜைகள் இலங்கையில் இவற்றில் பயணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அமெரிக்க அரச அதிகாரிகள் இவற்றில் பயணம் செய்வது கடுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைச் சிறுத்தைகளுக்கு சிறைவாசம் புதிதல்ல அது எங்கள் அமைப்புக்கு ஓய்வு எடுக்கின்ற குகை

## தொல்.திருமாவளவன் பேச்சு

சென்னை, பெப். 12

ஈழத்தமிழர்களுக்கான விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் ஆதரவு தொடரும் எனச் சூளுரைத்துள்ள அந்த அமைப்பின் தலைவர் தொல்.திருமாவளவன், அதற்காக சிறை செல்லவும் தயார் என்றும் கூறியுள்ளார். சிறைவாசம் தங்கள் அமைப்புக்கு ஓய்வு எடுக்கின்ற குகை என்றும் அவர் தெரிவித்தார்.

பெரம்பலூரில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு உறுப்பினர் ஒருவரின் நினைவு நிகழ்வில் தொல்.திருமாவளவன் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் உரையாற்றும்போது கூறியவை வருமாறு:-

''தி.மு.க. அரசுக்கு நாங்கள் நெருக்கடி கொடுத்து வருகின்றோம் எனத் தவறான தகவல் பரப்பி வருகின்றனர். அ.தி.மு.க. உடன் இணைந்து அரசியல் ஆதாயத்திற்காக சிலர் செய்துவரும் சதிமுயற்சிகளுக்கு காங்கிரஸ் நண்பர்கள் துணைபோய் விடக்கூடாது. ராஜீவ் காந்தி படுகொலையைப் பகடைக்காயாக்கி அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்யும் கட்சியினருக்கு காங்கிரஸ் மறந்தும் துணைபோய்விடக்கூடாது.

ஈழத் தமிழர்களுக்காக கண்டனமும், இரங்கலும் தெரிவிக்க எங்களுக்கு உரிமை உண்டா, இல்லையா என்றுதான் தெரியவில்லை. ஈழத்தமிழர்களுக்கான எங்கள் ஆதரவு தொடரும். அதற்காக சிறை செல்லவும் தயாராகவிருக்கிறோம். விடுதலைச் சிறுத்தைகளுக்கு சிறைவாசம் புதிதல்ல. சிறை என்பது விடுதலைச் சிறுத்தை ஓய்வெடுக்கும் குகை.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை. மாறாக ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கும், தமிழ் இனம் நசுக்கப்படுவதற்கும் நாங்கள் குரல் கொடுத்து வருகின்றோம். அதனாலேயே எங்கள் கட்சியின் மீது பிறரது பார்வை மாறுபாடாக உள்ளது. தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு இரங்கல் தெரிவிப்பது தேசத்துரோகமா?

''சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிவிடக்கூடாது என்று கருதும் சிங்கள அரசு கச்சதீவு அருகே கடலில் கண்ணிவெடிகளை மிதக்கவிட்டுள்ளது. கடலில் கண்ணிவெடிகளை அகற்றவும், கச்சதீவை மீட்கவும் இந்திய அரசு முன்வரவேண்டும். இது தொடர்பாக மத்திய அரசிடம் வலியுறுத்த முதலமைச்சர் தலைமையில் உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும்.''

- இவ்வாறு திருமாவளவன் கூறினார்.

# அரசியலில் ரஜினி?

சென்னை,பெப்.12

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் விரைவில் அரசியலில் குதிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரது அரசியல் பிரவேசத்திற்கு ஏற்கனவே அச்சாரமிடப்பட்டுள்ளது என்றும், அண்மையில் ராமர் பாலத்திற்கு ஆதரவாக நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார் என்றும்,அண்மைக்கால அரசியல் நிலைவரத்தை ரஜினி கூர்ந்து கவனித்து வருகிறார் என்றும், அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதும் பெண் டாக்டர் தெரிவித்துள்ளார். ஆன்மீகத்தில் மிகுந்த அக்கறையுள்ள ரஜினிகாந்த், தனது செல்வாக்கை ராமர் பாலத்துக்கு ஆதரவாக ஒன்றுதிரட்ட முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. அண்மையில் ராமர் பாலத்திற்கு ஆதரவாக நடந்த மாபெரும் கூட்டத்தில், பார்வையாளர்களில் ஒருவராக கலந்து கொண்டு ராமர் பாலம் குறித்து மிகுந்த அக்கறையுடன் கேட்டறிந்துள்ளார்.

அவரது இந்த ஆர்வம் விரைவில் அரசியலில் குதிக்க செய்வது தவிர்க்க முடியாதது என்றும் யாருடைய நிர்ப்பந்தம் காரணமாக இல்லாமல், அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் அவர் அரசியல் பிரவேசம் மேற்கொள்வார் என்றும் அவர் கூறினார். ரஜினிக்கு மிக நெருக்கமான இந்த டாக்டரின் பேட்டி தமிழகத்தில் மட்டுமல்லாமல் அகில இந்திய அளவிலும் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இலங்கைக் கடற்படை சூடு தமிழக மீனவர் ஒருவர் பலி!

புதுக்கோட்டை,பெப். 12

ஜெகதாப்பட்டினம் அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 2 மீனவர்கள் உயிர் தப்பிக்கரை சேர்ந்துள்ளனர். இதனால் மீனவர் கிராமத்தில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தை அடுத்துள்ளது செல்லனேந்தல் கிராமம். இந்த மீனவக் கிராமப் பகுதியில் இருந்து சுமார் 160 படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடந்த வெள்ளிக்கிழமை காலை கடலுக்குச் சென்றனர். இதில் ஒரு படகில் தங்கபாண்டியன் (வயது - 35), பாபு (வயது - 30), இடும்பன் (வயது - 37) ஆகியோர் இருந்தனர்.

ஜெகதாப்பட்டினத்தில் இருந்து 8 கடல் மைல் தொலைவில் தங்கபாண்டியன் சென்ற படகு இருந்தது. நேற்றுமுன்தினமிரவு இரவு அவர்கள் கரை திரும்புவதாக இருந்தது. இந்த நிலையில் இரவு 9 மணி அளவில் அந்த வழியாக வந்த இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள் எல்லை மீறியதாகக் கூறி கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் தங்கபாண்டியன், படகில் ரத்த வெள்ளத்தில் பிணமானார். மற்ற 2 மீனவர்களும் உயிர்தப்பி தங்கபாண்டியன் உடலோடு கரைக்கு வந்து சேர்ந்தனர். இவர்களுடன் மற்றப் படகுகளில் சென்ற அனைத்து மீனவர்களும் கரைக்குத் திரும்பினர்.

உயிரிழந்த மீனவர் தங்கபாண்டியன் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவருக்கு திருமணமாகி 3 பிள்ளைகள் உள்ளனர். இலங்கைக் கடற்படையினர் அத்துமீறி நடத்திய இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் செல்லனேந்தல் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அந்த மீனவர் கிராமமே சோக மயமாகக் காட்சி அளிக்கின்றது. இந்தச் சம்பவத்தை அடுத்து பொலிஸார் செல்லனேந்தல் கிராமத்தில் முகாமிட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்படுகிறது.

## சமய சந்நிதிகளில்

வலி.வடக்கு,பெப்.12

சுன்னாகம் வருஷப்புலம் மகாமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(203-86)

* * *

நல்லூர்,பெப்.12

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடைபெறும்.

21ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் தீர்த்த உற்சவமும் மறுநாள் பூங்காவனமும் திருக்கல்யாணமும் இடம் பெறவுள்ளன.

(1-111)


## வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சிவரஞ்சினி விஜயகுமாரன்
அவர்கள் வடமராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வுபெற்றமையைப் பாராட்டுகிறோம். அவர் மேன்மேலும் பல பதவிகளைப் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
யா/நெல்லியடி மெ.மி.த.க.பா.
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்.
(09.02.2008இல் வெளியான விளம்பரத்தில் வடமராட்சி என்பது தென்மராட்சி எனத் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 04 ★ 08 ★ 1947



இறப்பு 13 ★ 01 ★ 2008

செல்லப்பா கிறிஸ்ரி குமாரசாமி

எம் அன்புத் தெய்வமே அப்பா!
ஆருயிராய் நீங்கள் இருந்தீர்கள்
உங்கள்முகம் காணாது தவிக்கிறோம்
இப்புவியில் நாங்கள் இருக்கும் வரை
உங்கள் நினைவுகள் மட்டும் - எம்
நெஞ்சை விட்டு என்றுமே நீங்காது

அன்னார் வைத்தியசாலையில் இருந்தவேளை, சேவை செய்த வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் உதவியாளர்களுக்கு எமது குடும்பம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

3, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (71038) மனைவி, பிள்ளைகள்.

## தவறிவிட்டது

346, கோயில் வீதி, நல்லூர் என்னும்முகவரியைச் சேர்ந்த கந்தையா தியாகராசா என்பவரது தேசிய அ.அ (511553733V) 03.02.2008 அன்று வளாக வீதிக்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தியாகி கலைக்[illegible] துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

ஓம் சாயிராம்

## மீண்டும் ஒருமுறை நடனமணிகளுக்கு ஓர் அரியவாய்ப்பு!

யாழ்.நகர்மைய றோட்டறிக் கழகத்தினின் அனுசரணையுடன் சென்னை அடையாறு கலாக்ஷேத்ராவின் பட்டதாரியான செல்வி பிரஷாந்தி யோகராஜா
அவர்களால் நடத்தப்படும்

### மாபெரும் நடனப் பயிற்சிப்பட்டறை

இடம்: சாயி நர்த்தனக்ஷேத்ரா (யாழ்ப்பாணக் கிளை)
நடனப்பயிற்சிப் பட்டறை நிலையம், இல.47, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்
(மிலேனியம் றெஸ்ரோறன்ற் முன்பாக, கலட்டிச் சந்திக்கு அருகில்)

காலம்: 16ஆம் திகதி - 21 வரை
நேரம்: (9 - 12) அல்லது (3.30 - 5.30)

சாராம்சம்:

- யோகா உடற்பயிற்சிகள் ஊடாக நடனத்திற்கான தயார்படுத்தல்
- தில்லானா, ஜாவளி ஆகிய கலாக்ஷேத்ரா உருப்படிகள் கற்பித்துக் கொடுக்கப்படும்.
- கற்பித்துக் கொடுக்கப்படும் உருப்படிகளிற்கான இசை வடிவங்கள் கலாக்ஷேத்ரா கலைஞர்களால் உருவாக்கப்பட்ட இறுவெட்டு (CD வடிவில்) வழங்கப்படும்.

மேற்படி நடனப் பயிற்சிப்பட்டறைக்கான பதிவுகளை மேற்கொள்பவர்கள் 14, 15, 16 ஆகிய திகதிகளில் மேற்கூறப்பட்ட முகவரியில் 11 A.M. - 5 P.M வரை. கட்டணம் 1000/= செலுத்தி அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0774147480, 7670

- முன்னர் வெற்றிகரமாக நடைபெற்றுமுடிந்த பயிற்சிப்பட்டறைக்கு கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

(சி/551433) கழகத்தினர்.

## நீங்காத நினைவுகளுடன் 16ஆம் ஆண்டில்



அமரர்
முத்துத்தம்பி இரத்தினவேலு
(சந்தானம்)
திதி: 12.02.2008

ஆண்டுகள் பதினாறு அல்ல பல்லாயிரம் ஆனாலும்
அழியாத ஓவியமாய் எம்மனதில் நீர் இருப்பீர்.

தேவாலய ஒழுங்கை, [illegible] ஆனைக்கோட்டை.

பிறேம் நகைமாடம்
பிறேம் பிளாஸா,
யாழ்.வீதி, மானிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(71036)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குத் திமோர் ஜனாதிபதி மீது சூடு; மயக்க நிலையில் ஆஸ்ரேலியாவுக்கு விரைவு


கிழக்கு திமோர் ஜனாதிபதி

டிலி, பெப்.12

கிழக்குத் திமோர் ஜனாதிபதி ஜோஸ் ரமோஸ் - ஹோர்ட்டா நேற்றுக் காலை அவரது வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் சுடப்பட்டார். வயிற்றுப் பகுதியில் சூட்டுக்கு இலக்கான அவர் 'கோமா' நிலையில் ஆஸ்திரேலிய மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை 'அரசுக்கு எதிரான பிசுபிசுத்துவிட்ட புரட்சிச் சதி' என கிழக்குத் திமோர் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

கிழக்குத் திமோர் தலைநகரான டிலியின் புறநகர்ப் பகுதியிலுள்ள தம் வாசஸ்தல வளவில் ஜனாதிபதி சுடப்பட்டார். வயிற்றில் ஏற்பட்ட காயத்துடன் முதலில் திமோரிலுள்ள ஆஸ்திரேலிய இராணுவ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவரின் நிலைமை பின்னர் மோசமடைந்தது. இதையடுத்து அவர் ஆஸ்திரேலிய நகரான 'டார்வினிலுள்ள மருத்துவமனைக்கு ''கோமா'' நிலையில் கொண்டு செல்லப்பட்டார் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

துப்பாக்கிப் பிரயோகத்தின்போது ஜனாதிபதியின் பாதுகாவலர்கள் பதில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்கள். இதன் போது ஜனாதிபதி மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திய அல் பிரிடோ ரியினடோ என்னும் முன்னாள் படைவீரர் கொல்லப்பட்டார். அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் முன்னர் ஈடுபட்ட வீரர்களில் இவருமொருவர். இவ்வாறு விலக்கப்பட்ட வீரர்கள் ஒருங்கிணைந்து அரசுக்கு எதிரான தீவிரவாதப் படையொன்றை நிறுவி செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதமர் எக்ஸணானா குஷ்மாவோ பயணித்த வாகன அணி மீதும் நேற்றுத் திங்கட்கிழமை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இதில் குஷ்மாவோ காயங்கள் எதுவுமின்றி தப்பினார். அத்துடன் அணியில் பயணித்த ஏனையோரும் காயங்களின்றி தப்பியுள்ளனர்.

கிழக்குத் தீமோர் ஜனாதிபதி 1996ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியைத் தாக்குங்கள் அல் - குவைதா உத்தரவு .

பேர்ளின், பெப். 12

ஜேர்மனி மீது தாக்குதல்களை நடத்துமாறு தனது உறுப்பினர்களுக்கு அல் - குவைதா உத்தரவிட்டுள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுடன் போரிட்டு வரும் பன்னாட்டுப் படையில் ஜேர்மனி இராணுவமும் இடம் பெற்றுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்துள்ள அல் - குவைதா இயக்கம், ஜேர்மனி மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இத் தகவலை ஜேர்மனி உள்துறை அமைச்சக செயலாளர் அகஸ்ட் ஹன்னிங் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் உள்ள அல் - குவைதாத் தலைவர்கள் ஜேர்மனி மீது தாக்குதல் நடத்துமாறு தங்கள் இயக்கத் தீவிரவாதிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றனர் என அவர் கூறினார்.

எல்லாத் தாக்குதல்களையும் தங்களால் முறியடிக்க முடியாது என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

(சி)

## பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் ஈராக்கில் சுமார் 70 பேர் உயிரிழப்பு

பலாட், பெப்.12

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல் சம்பவங்களில் 70 பேர் வரை பலியாகினர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தை நகரான பலாட்டுக்கு அருகிலுள்ள ஈராக்கிய இராணுவச் சோதனைச் சாவடியொன்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதல் ஒன்றில் 35 பேர் வரை உயிரிழந்தனர். 'பிக்- அப்' ரக வாகனமொன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரி இத்தாக்குதலை நடத்தியுள்ளார். அதில் ஆறு பீப்பாக்களில் வெடிபொருட்கள் இருந்துள்ளனவென, ஈராக்கிய பொலிஸ் அதிகாரியொருவர் பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு விவரித்துள்ளார்.

சோதனைச்சாவடிக்கருகில் பயங்கரமாக வெடித்துச்சிதறிய இக்குண்டுத்தாக்குதலில் குண்டுதாரியின் உடலும் சிதறி விட்டது. இச் சோதனைச் சாவடியில் ஈராக்கிய பாதுகாப்புப் படையினரும்,உள்ளூர் பாதுகாவலர்களும் கூட்டுப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் ஞாயிற்றுக்கிழமை பல இடங்களிலும் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றில் மொத்தம் 70 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் தற்கொலைக் கார் குண்டுத் தாக்குதலுக்கு பலியான மூன்று பொலிஸாரும் அடங்குவர் என ஈராக்கிய பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## தொடர்கிறது ஒபாமாவின் வெற்றிநடை

நியூயோர்க், பெப். 12

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கான தகுதியைப் பெறுவதற்காக நடைபெற்றுவரும் வேட்பாளர் தேர்தலில் பாரக் ஒபாமாவின் வெற்றிநடை தொடர்கிறது. நேற்றுமுன்தினம் மைனே மாநிலத்தில் நடந்த தேர்தலில் ஹிலாரி கிளின்ரனை 19 சதவீத மேல திக வாக்குகளால் ஒபாமா வெற்றிகொண்டார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி வேட்பாளர் வாய்ப்பைப் பெறுவதற்கான தேர்தல் நடைபெற்று வருகிறது.

ஜனநாயகக் கட்சியில் ஹிலாரி கிளின்ரன் மற்றும் பாரக் ஒபாமா இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் வாஷிங்டன் உள்ளிட்ட 3 மாநிலங்களில் ஒபாமா வெற்றிபெற்றார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மைனே



மாநிலத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஒபாமா பெரு வெற்றியைப் பெற்றார். இதனையடுத்து ஹிலாரி போட்டியில் பின்தங்கியுள்ளார். இந்த வாக்கெடுப்பில் ஒபாமாவுக்கு 59 சதவீத வாக்குகளும், ஹிலாரிக்கு 40 சதவீத வாக்குகளும் கிடைக்கப்பெற்றன.

மைனே மாநிலத்தில் ஒபாமாவுக்கு 15 பிரதிநிதிகளும், ஹிலாரிக்கு 9 பிரதிநிதிகளும் கிடைத்துள்ளனர்.

## இலங்கைக் கடற்படையினரைக் கண்டித்து மீனவர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

அறந்தாங்கி, பெப்.12

துப்பாக்கிச் சூட்டில் மீனவர் பலியான சம்பவத் திற்கு காரணமான இலங்கைக் கடற்படையினரைக் கண்டித்து புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் நேற்று முதல் ,கால வரையற்றவேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் செல்லனேந்தலைச் சேர்ந்த மீனவர் தங்கபாண்டியன் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையினர் அத்துமீறி, தங்கபாண்டியன் படகை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இதில் குண்டு பாய்ந்து தங்கபாண்டியன் பரிதாபமாக இறந்தார். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்ட விசைப்படகு மீனவர் சங்க கூட்டம் செல்லனேந்தல் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விசைப்படகு மீனவர்கள் சங்க தலைவர் ராம கிருஷ்ணன் ஊடகவியலாளர்களிடம் கூறியவை வருமாறு:-

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவது தொடர் கதையாகிவிட்டது. இதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

அப்பாவி மீனவர்களை கொன்று குவிக்கும் இலங்கைக் கடற்படையைக் கண்டித்தும், தமிழக மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் கடலில் மீன்பிடிக்க தகுந்த பாதுகாப்பு வழங்கக் கோரியும் புதுக்கோட்டை மாவட்ட விசைப்படகு மீனவர்கள் சங்கம் சார் பில் கால வரையறையற்ற வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளோம். இதன்படி ஜெகதாபட்டினத்தில் இருந்து மீன்பிடிக்கச் செல்லும் 350 விசைப்படகுகளும் திங்கட்கி ழமை முதல் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாது.

- இவ்வாறு அவர் கூறினார்.

## அடுத்த பிரட் லீயாக இஷாந்த் புகழாரம் சூட்டுகிறார் பிளெமிங்

வெலிங்டன், பெப்.12

இந்திய இளம் வேகப் பந்துவீச்சாளர் இஷாந்த் சர்மா, பிரட் லீயை பின்னுக்குத் தள்ளி விட்டு உலகின் அதிவேகப் பந்துவீச்சாளராக உருவெடுப்பார் என்று முன்னாள் நியூஸிலாந்து அணித் தலைவர் பிளெமிங் புகழாரம் சூட்டியுள்ளார்.

நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் இது தொடர்பாக பிளெமிங் கூறியிருப்பவை வருமாறு:-

''டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள் போட்டிகளில் இஷாந்த் சர்மா ஆஸ்திரேலிய வீரர்களைத் தடுமாற வைத்திருக்கிறார். இஷாந்த் சர்மா அபாரமாகப் பந்துவீசி வருகிறார். எதிர்வரும் காலத்தில் அவர் இந்தியப் பந்துவீச்சில் முக்கிய அங்கமாகத் திகழப் போகிறார்.

''தற்போது மிகச் சிறந்த பந்துவீச்சாளர்களாக விளங்கும் பிரட் லீ போன்றவர்களை அவர் பின்னுக்குத் தள்ளி விடும் வாய்ப்பு இருக்கிறது. எதிர்வரும் காலங்களில் உலகின் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக அவர் உருவெடுப்பார்.'' - என்றார்.

## துடுப்பாட்டம் மோசம்

### பொண்டிங் வருத்தம்

மெல்போர்ண், பெப்.12

இந்தியாவிடம் தோல்வி அடைந்ததற்கு மோசமான துடுப்பாட்டம்தான் காரணம் என ஆஸி. அணித்தலைவர் பொண்டிங் வருத்தம் தெரிவித்துள்ளார்.

முத்தரப்புத் தொடரின் நான்காவது போட்டியில் இளம் இந்திய வீரர்கள் ஆஸ்திரேலியாவை திணறடித்தனர். இது குறித்து ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் கூறுகையில்,

''ஆட்டத்தோடு ஒன்றி வெற்றிபெற முயற்சித்தோம். சரியான விளையாட்டை வெளிப்படுத்தத் தவறிவிட்டோம். அடுத்த இரண்டு போட்டிகளிலும் அதிக கவனம் செலுத்துவோம்.'' - என்றார்.

வெற்றி குறித்து இந்திய ஆட்ட நாயகன் இஷாந்த் கூறுகையில், ''ஆஸ்திரேலிய வீரர்களின் பலம் பற்றி நான் யோசிக்கவில்லை. என்னுடைய திறமை பற்றியே யோசித்தேன். சிறப்பாக பந்துவீச வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டேன். அது பலன் தந்தது. சச்சின் 'அட்வைஸ்' செய்தபடி இயல்பாக பந்துவீசினேன். புதிய பந்திலும் 'நோபோல்' வீசாமல் நேர்த்தியாக இருந்தேன். நூறு சதவீதம் திறமையை நிரூபிக்க முடிந்தது. என் வேகத்துக்கு உதவிய பயிற்சியாளர் கிரகரி கிங்குக்கு நன்றி.'' என்றார்.

## அக்தருக்கு எச்சரிக்கை

கராச்சி, பெப்.12

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு எதிராகக் கருத்துக் கூறுவதை நிறுத்துமாறு வேகப்பந்துவீச்சாளர் சொய்ப் அக்தருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளரான அக்தர், கிரிக்கெட் சபை அறிவித்த புதிய ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை. இதனால் அதிருப்தி அடைந்த அக்தர் கிரிக்கெட் சபை இரட்டை நிலையை பின்பற்றுவதாக விமர்சனம் செய்திருந்தார்.

இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் நஸீம் அஷ்ரப், கிரிக்கெட்சபையின் செயல்பாடுகளை வெளிப்படையாக விமர்சிப்பதை அக்தர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதிருப்தி ஏதாவது இருக்குமாயின் அது பற்றி கிரிக்கெட் சபையிடம் தனிப்பட்ட முறையில் முறையீடு செய்யலாம் என்று அவர் கூறியுள்ளார். ஆனால், வெளிப்படையாக கருத்துத் தெரிவித்தால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ...

(சி)

## முத்தரப்புத் தொடர்

## மீண்டு எழுமா இலங்கை அணி? இந்தியாவுடன் இன்று மோதல்

கான்பரா,பெப்.12

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரின் 5ஆவது போட்டியில் இன்று இலங்கை, இந்தியா அணிகள் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் படுதோல்வியைச் சந்தித்த இலங்கை அணி இன்றைய போட்டியில் மீண்டு எழுமா என ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இலங்கையுடன் இந்தியா மோதிய முதல் ஆட்டம் மழையால் பாதியில் கைவிடப்பட்டது. அந்த ஆட்டத்தில் காம்பீர், டோனி மிகவும் சிறப்பாக விளையாடினார்கள். டெண்டுல்கரும், ரோகித் சர்மாவும் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர். சிறப்பாக விளையாடி வந்த கம்பீரை நேற்றுமுன்தினம் 3ஆவது வீரருக்கு பதிலாக 4ஆவது வீரராக களம் இறக்கியது தவறு என பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். பதானை 3ஆவது வீரராக ஆட வைத்த முடிவுக்கு முன்னாள் இந்திய அணித்தலைவர்களான சிறிகாந்த், ரவிசாஸ்திரி ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்து உள்ளனர். இதனால் அவர் தொடர்ந்தும் 3ஆம் இடத்திலேயே களமிறக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. யுவராஜ்சிங்கின் துடுப்பாட்டம் தொடர்ந்து கவலை அளிக்கும் வகையில் உள்ளது. நீக்கப்பட வேண்டிய பட்டியலில் அவர் உள்ளார்.

இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கு சுழற்பந்து வீரர் முரளிதரன் கடும் சவாலாக இருப்பார். பிரிஸ்பேன் போட்டியில் அவர் ஒரே ஓவரில் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றி முத்திரை பதித்தார். இலங்கை அணியின் துடுப்பாட்டம் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் மிகவும் மோசமாகவே இருந்தது. அதைச் சரிகட்டும் விதமாக இன்றைய ஆட்டத்தில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் ஆடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய போட்டி இலங்கை நேரப்படி அதிகாலை 4.30 மணிக்கு தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தில் தொங்கிய வயரை வெட்டி குண்டு வெடிக்காமல் தடுத்தேன்

## அநு. சந்தைச் சம்பவம் குறித்துச் சிப்பாய்

கொழும்பு, பெப். 12

மரத்தில் வயர் ஒன்று தொங்குவதைக் கண்டேன். அது நேரக் கணிப்புக்குரியது என்று அறிந்தேன். அங்குள்ள கடையில் கத்தரிக்கோல் எடுத்து வயரை வெட்டினேன். அதனால் குண்டு வெடிப்பு அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் பொதுச் சந்தையில் வைக்கப்பட்டிருந்த குண்டை செயலிழக்கச் செய்தவர் என்று தெரிவிக்கப்படும் கடற்படைச் சிப்பாய் என்.ஐ.பண்டார இவ்வாறு கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் ஊடகவியலாளர்களுக்கு அவர் மேலும் கூறியவையாவது:-

''அநுராதபுரமான எனது சொந்த ஊருக்கு விடுமுறையில் வந்திருந்தேன். சம்பவ தினத்தன்று ஞாயிறு சந்தைக்கு நான் எனது மனைவியுடன் சென்றிருந்தேன்.

அங்கு பிரயாணப்பை ஒன்று வாங்குவதற்காக கடை ஒன்றுக்கு அருகில் சென்றபோது மரத்தில் வயர் ஒன்று தொங்குவதைக் கண்டேன். பின்பு அது நேரக்கணிப்பு வெடிகுண்டு என்று அறிந்துகொண்டேன்.

ஒரு கடையில் இருந்த கத்தரிக்கோலை எடுத்துக்கொண்டு மரத்தில் ஏறி வயரை வெட்டி அக்குண்டு வெடிக்காமல் தடுத்தேன்.

அச்சந்தர்ப்பத்தில் அங்கு எவரையும் வரவிடாமல் தடுத்தேன். சந்தைக்கு வந்திருந்தவர்கள் எனது எச்சரிக்கையால் தூரத்தில் விலகி நின்றனர். - என்றார்.

அநுராதபுரத்தைச் சொந்த இடமாகக் கொண்டே எஸ்.எஸ்.டபிள்யூ.எஸ்.ஐ. பண்டார, மன்னார் சிலாபத்துறை கடற்படை முகாமில் கடமையாற்றிவருகிறார். அவருக்கு அரசால் நேற்றுப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. அவர் கொழும்புக்குக் கூட்டி வரப்பட்டு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். அவருக்கு 'வீரப் பதக்கம்' வழங்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. (அ-சி)

## கொட்டாஞ்சேனையில் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு,பெப்.12

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள கல்பொத்த சுற்றுவட்டப் பகுதியில் நேற்று அதிகாலை பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர் என்று கருதப்படும் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஜம்பட்டா வீதியில் வசித்துவந்த சாள்ஸ் அன்டனி செனிஸ்டர் (வயது - 28) என்ற தமிழ் இளைஞரே துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் அங்கு சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான நீதிவான் விசாரணைகள் நேற்று இடம்பெற்றன என்றும், இவரது சடலம் கொழும்பு, தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் தெரிவித்திருக்கின்றனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ - 03)

## மாலைதீவு ஜனாதிபதி இன்று இலங்கை வருகிறார்

மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கையூம் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவின் விசேட அழைப்பின் பேரில் இலங்கை வரும் இவர் இங்கு இரு தினங்கள் தங்கியிருப்பார் என வெளிவிவகார் அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வருடத்தில் தனது அரசியல் வாழ்வில் 30 வருடங்களை பூர்த்தி செய்யும் மாலைதீவு ஜனாதிபதி ஆற்றிய அளப்பரிய பணிகளை கௌரவிக்கும் முகமாக இலங்கையின் அதியுயர் தேசிய விருதான 'லங்கா ரத்ன' விருது, சிறப்பு வைபவமொன்றில் இலங்கை ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ளது.

## ஆசிரிய கலாசாலை பெறுபேறு கிடைத்தது

யழ்ப்பாணம்,பெப்.12

கோப்பாய் ஆசிரிய கலாசலையின் 2005-2006 கல்வி ஆண்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அறிவித்துள்ளார்.

மாணவர்கள் தமது பெறுபேற்றுச் சான்றிதழ்களை இன்று முதல் காலையில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அதிபர் தெரிவித்தார்.

## மனோகணேசன் இன்று நாடு திரும்புகின்றார்

கொழும்பு, பெப். 12

பாதுகாப்பு அச்சுறுத்தல் கருதி அண்மைக்காலமாக வெளிநாட்டில் தங்கியிருந்த மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் எம்.பி.இன்று காலை நாடு திரும்புகின்றார்.

தமக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு கோரி அவர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 'ரிட்' மனு மீதான இடைக்காலத் தீர்ப்பை நீதிமன்றம் நாளை மறுதினம் வழங்க இருக்கையில் மனோ கணேசன் நாடு திரும்புகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# பாதுகாப்புக் கோரும் ஹக்கீமின் வழக்கு சுமுகமாக நீதிமன்றில் முடிவு

கொழும்பு, பெப்.12

தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கக் கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்று முடிவுக்குக் கொண்டுவந்தது.

இந்த மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் நந்தன சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான பொலிஸ் தலைமையகத்தின் சட்டப்பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி திஸநாயக்க, மனுதாரருக்கு - அவரது விண்ணப்பத்தை அடுத்து - எட்டு மெய்ப் பாதுகாவலர்களும் அவர்களுக்கு இரு வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்டு வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்படுவதாக நீதியரசர்கள் அறிவித்தனர். (உ)

## இந்திய கம்யூ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என. தமிழ்நாட்டில் நிலவும் உணர்வலைகளைக் கருத்தில் கொண்டே சிங்கள அடிப்படைவாத தேசியக்கட்சியான ஜே.வி.பியை மாநாட்டுக்கு அழைக்க வேண்டாமென தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது எனவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவரே நேற்றுக்காலை 8 மணிக்கு கிளைமோரில் சிக்கினர்.

சூடுவெந்தபிளவு, அவுசரப்பிட்டி என்னும் இடத்தில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சப். இன்ஸ்பெக்டரும், கான்ஸ்டபிளும் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு மரணமானார்கள். (அ-1-164)

## மாணவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் அப்பிரதேசங்களில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதன்மூலம் அப்பிள்ளைகளின் கல்வியைப் பாதுகாக்க அரசு தவறியுள்ளது.

வடபகுதியில் மட்டும் 2 ஆயிரத்து 900 ஆசிரியர்கள் வெற்றிடங்கள் நிலவுகின்றன். கிழக்கில் ஆயிரத்து 582 ஆசிரியர்கள் வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதனால் பிள்ளைகள் கல்வி கற்க முடியாது தவிக்கின்றனர்.

இதுவரையில் அவர்களது கல்வித் தரத்தை உயர்த்த அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதேவேளை, அரசுடன் இணைந்து செயற்படும் அரசியல்வாதிகளின் ஆதரவாளர்களுக்கு, ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் சித்தியடையாதவர்களுக்கு, வடக்குக் கிழக்கில் ஆசிரியர் தொழிலை வழங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் வடக்குக் கிழக்குப் பிள்ளைகளின் கல்வி கற்கும் உரிமையை பறிக்கும் அதேவேளை, கல்வி அறிவு இல்லாதவர்களை பயன்படுத்தி பிள்ளைகளைக் கல்வியில் பின்தள்ளும் செயலையும் அரசு முன்னெடுக்கின்றது. மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கவேண்டும் என 20 வருடங்களுக்குப்பிறகு அரசுக்கு ஞானோதயம் பிறந்திருக்கிறது.

இப்போதும் கல்வித்துறையில் நிலவும் குறைபாடுகளை மாகாணசபைகள்மூலம் தீர்க்காது காலத்தைக் கடத்துகிறது. கிழக்கு மாகாணத்தை மீட்டுவிட்டோம் எனக் கூறும் அரசு அங்குள்ள பிள்ளைகளுக்கு ஏன் கல்வி கற்கும் உரிமையை வழங்க மறுக்கின்றது. - என்றார்.

கலை, வர்த்தக மாணவர்களுக்கு
A/L 2008 DAY CLASS
பொருளியல்
கே.பிரதீபன்
பேரினப்பொருளாதாரம்
நாளை காலை 10 மணிக்கு
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்நகர்

## ரயிலில் வைத்து 7 தமிழர்கள் கைது

கொழும்பு, பெப். 12

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த ரயிலில் பயணம் செய்த ஏழு தமிழர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த ரயிலை லுணுவில ரயில் நிலையத்தில் வைத்துப் பொலிஸார் சோதனையிட்டனர். அதன்போது சந்தேகத்தின் பேரில் இவர்கள் ஏழுபேரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## அக்கரைப்பற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்குவைத்துத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் இதன்போதே இந்த மாணவர் கொல்லப்பட்டார் என அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது விசேட அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

## கிளிநொச்சி மாவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவில்லை என்று கிளிநொச்சித் தபாலகம் தெரிவித்திருக்கிறது.

கிளிநொச்சியில் தபாலகத்தில் வழமையான உள்ளூர் தபால்சேவைகள் நடைபெற்று வருகின்ற நிலையில் வெளிமாவட்டங்களுக்கான தபால் சேவை நிறுத்தப்பட்டிருப்பதால் கிளிநொச்சி தபாலகத்தில் தபால்கள் குவிந்து கிடக்கின்றன என்று கூறப்பட்டது.

## கொழும்புப் பாட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிவரையும் மூடப்பட்டிருந்தன. நேற்று முதல் இப்பாடசாலைகள் அனைத்தும் மீண்டும் வழமைபோல் இயங்கத்தொடங்கியுள்ளன.

பாடசாலைகளில் பாதுகாப்பை ஒட்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டமையைக் காணக் கூடியதாக இருந்தது. (சி)

## மன்னார், வவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த வாகனங்கள், வைத்தியர்களின் அலுவலக மற்றும் தனிப்பட்ட வாகனங்கள் போன்றன மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாக பயணிக்க அனுமதிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

காலை 8 மணியிலிருந்து 10 மணி வரை இடம்பெற்ற இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தால் நூற்றுக்குமேற்பட்ட நோயாளர்கள் பாதிக்கப்பட்டனர் என்றும் -

போராட்டத்தின் பின்னர் வைத்தியசாலைப் பணிகள் வழமைக்குத் திரும்பின என்றும் - தெரிவிக்கப்பட்டது. (சி)

## புலிகளைத் தோற்கடிப்பதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான ஆனந்தசங்கரி செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்றின்போதே இவற்றைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கையில் தமிழர்களுக்கு தனித் தாயகம் அமைக்கவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கோரிக்கையை உலகில் எந்தவொரு நாடும் ஆதரிக்காது. நெடுங்காலமாக நீடித்துவரும் தமிழர் இனப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வுக்கும் பிரபாகரனும் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்.

இந்தியாவில் இருப்பது போல் கூட்டாட்சி முறையில் ஈழத்தமிழர்களுக்கு தீர்வு காண்பதை பிரபாகரன் எதிர்க்கின்றார். தமிழர்களுக்குத் தனித்தாயகம் அமைக்கவேண்டும் என்ற பிரபாகரனின் கோரிக்கை நிறைவேறாது என்பதை இந்தியாவும் நன்கு அறிந்துவைத்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அவர்களை தோற்கடிக்க இந்தியா தலையிட்டு இலங்கை அரசுக்கு உதவவேண்டும். புலிகளுக்கு ஆதரவு அளிப்பதால் ஏற்படும் ஆபத்தை சர்வதேச சமுதாயம் விரைவில் உணரும்.

இந்திய தலைவர்களுடனும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனுடனும் நான் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தினேன். புலிகளை ஆதரித்தால் இந்தியாவிலேயே ஒரு யாழ்ப்பாணத்தை காண்பீர்கள் என்று நான் இந்தியத் தலைவர்களை எச்சரித்தேன்.

தமிழர் பகுதிக்கு சுயாட்சி வழங்கும் வகையில் இலங்கை அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தத்தை அமுல் செய்வது வரவேற்கத்தக்கது.

விடுதலைப் புலிகள் அமைப்பு உலகம் முழுவதற்குமே ஓர் அச்சுறுத்தலாக உள்ளது. விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஆதரிப்பதால் உண்டாகும் ஆபத்தை சர்வதேச சமூகம் விரைவில் உணரும்.

உலகின் பல நாடுகளிலும் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளார்கள். ஒன்றில் அவர்கள் பயத்தினால் அவ்வாறு மாறியிருக்கவேண்டும். அல்லது யாழ்ப்பாணத்தில் தமது தாயகத்தை உருவாக்க முடியும் என்ற மடைத்தனமான நம்பிக்கையால் அவ்வாறு மாறியிருக்கவேண்டும்.

இந்தியாவில், வைகோ மற்றும் பழ.நெடுமாறன் ஆகியோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கித் தவறு இழைத்து வருகிறார்கள். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு முன்னர் அங்கு விடுதலைப் புலிகளுக்கு நிறைய ஆதரவு இருந்தது. ஆனால் அதன் பின்னர் நிலைமை வெகுவாக மாறிவிட்டது.

ஐக்கிய இலங்கைக்குள்ளேயே தீர்வை பெரிதும் விரும்புகிறேன். ஆனால் இலங்கையில் சமஷ்டி என்ற சொல் சிலருக்கு ஒவ்வாமையாகவே இருக்கிறது - என்றார். (அ)

## மரண அறிவித்தல்

### கனகன் சின்னத்துரை

மருதங்குளம், மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகன் சின்னத்துரை நேற்று (11.02.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகன் - வள்ளியின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், தில்லைநாதன், மலர்மணி, சின்னம்மா, செல்லப்பா, சரவணமுத்து, சின்னராசா, செல்வராசா, பொன்னம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரோகினி (சுவிஸ்), சுகந்தினி (சுவிஸ்), காலஞ்சென்ற சுதர்சன், சுகிர்தரன் (சுவிஸ்), அஸ்வினி, கீர்த்திகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா (சுவிஸ்), யோகதீஸன் (சுவிஸ்), ராஜ்குமார் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகசிங்கத்தின் (நோர்வே) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.02.2008) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதங்குளம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
ராஜ்குமார்
(மருமகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org